Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, DECEMBER 2, 2022

வெள்ளிக்கிழமை 02, டிசெம்பர் 2022 | ஒளி: 08 கதிர் 156 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE



# மனசாட்சியே இல்லையா?

## அரசாங்கத்தை கேட்கிறார் சஜித்

■ பா.நிரோஸ்

நாட்டு மக்கள் வாழவே முடியாத நிலையில் இருக்கும்போது மின் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்தின் இத்தீர்மானத்தை நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கல்வி அமைச்சு, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சுகளுக்கான வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் நேற்று (1) கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# எலிக்காய்ச்சல் பரவுதல் அதிகரிப்பு




மழை காரணமாக விவசாயப் பகுதிகளை அண்மித்த பிரதேசங்களில் எலிக்காய்ச்சல் பரவும் வீதம் அதிகரித்துள்ளதாக சுகாதாரப்பிரிவு தெரிவித்துள்ளது.

"நெற்செய்கையில் ஈடுபடும் போது சிறுநீரக நோயாளர்கள் மற்றும் கல்லீரலுடன் தொடர்புடைய நோய் தொற்றுக்குள்ளானவர்கள் இந்த விடயம் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும்" என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# 6 ஆயிரம் மாணவர்கள் பெயில்

## இதற்கு யார் பொறுப்புக் கூறுவது?

■ பா.நிரோஸ்



அண்மையில் வெளியான சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகளின்படி, எந்தவொரு பாடங்களிலும் சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை 6 ஆயிரமாக உள்ளதென தெரிவிக்கும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இந்த 6 ஆயிரம் மாணவர்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியது யார் எனவும் சபையில் கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2



# சீனத்தூதுவருடன் கலந்துரையாடல்

இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென் ஹாங் நேற்று (1) வெளிவிவகார அமைச்சில் வெளிவிவகாரச் செயலாளர் அருணி விஜேவர்தனவைச் சந்தித்து கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம்

# எம்.பியின் வீட்டில் கஞ்சா

■ பா.நிரோஸ்

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீடொன்றில் கஞ்சா பயிரிடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண பாராளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

கல்வி அமைச்சு, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சுக்களுக்கான வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் நேற்று (1) நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# வரலாற்றில் முதல் தடவையாக...

பாராளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாகப் பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கு அதிக எண்ணிக்கையிலான பாடசாலை மாணவர்கள் நேற்று (01) வருகை தந்ததாகப் படைக்கலச் சேவிதர் நரேந்திர பெர்னாந்து தெரிவித்தார்.

இதன்படி, நாடளாவிய ரீதியில் பல்வேறு பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 32 பாடசாலைகளைச் சேர்ந்த 5,000இற்கும் அதிகமான மாணவர்களுக்கு பாராளுமன்றத்தைப் பார்வையிட வருகை தந்திருந்தனர்.

உலகப் பாராளுமன்றங்களுடன் ஒப்பிடுகையில், ஒரே நாளில் இவ்வளவு பேர் பாராளுமன்றத்திற்கு வருகை தந்தமை சாதனையாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொவிட் தொற்று காரணமாக மூடப்பட்டிருந்த பொது மக்கள் கலரியானது செப்டெம்பர் 19ஆம் திகதி முதல் திறக்கப்பட்டதையடுத்து, தீவின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 25,000இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாராளுமன்ற விவாதங்களை அவதானிக்க வந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# சகலரும் இலங்கைக்கு கைகொடுக்க வேண்டும்

## ஐ.எம்.எப், ஏனைய நிதி நிறுவனங்களுக்கு சீனா வலியுறுத்து

## சாணக்கியனின் கருத்துக்கும் தூதரகம் பதிலடி

நெருக்கடி நிலைமையில் இலங்கைக்கு முழுமையாக கைகொடுத்த நாடாக நாமே உள்ளோம், அத்துடன் கடன் நெருக்கடியில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் விதமாக சகல முயற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றோம் என தெரிவித்துள்ள இலங்கையில் உள்ள சீனத் தூதரகம், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சாணாக்கியன் எம்.பியின் விமர்சனத்தையும் கண்டித்துள்ளது.

தொடர்ச்சி P2




# "SriLanka First"

## கனவுக்காக அர்ப்பணிப்போம்

இலங்கையை முன்னிலைக்கு கொண்டு வருவதே தமது நோக்கமாகும் எனவும், அந்த இலக்கை நோக்கிய பயணத்தில்,இந்நாட்டின் கல்வித்துறையில் பாரிய முற்போக்கு புரட்சிகரமான மாற்றமொன்று ஏற்படுத்த வேண்டும் என தான் நம்புவதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# ரயிலுடன் ஓட்டோ மோதியதில் பெண் உட்பட இருவர் பலி

உனவட்டுனவில் ரயிலுடன் ஓட்டோ நேற்று (01) மோதி விபத்துக்கு உள்ளானதில், வெளிநாட்டு பெண்ணொருவர் உட்பட இருவர் பலியாகியுள்ளனர்.

உனவட்டுன மஹரம்ப ரயில் கடவையில், ஓட்டோவொன்று ரஜரட்ட மெனிக்கே ரயிலில் மோதியதிலேயே இவ்விபத்து சம்பவித்துள்ளது. அவ்விடத்தில், ரயில் சமிக்ஞைகளில் கோளாறு ஏற்பட்டுள்ளது என்ற அறிவித்தல் பதாகையும் தொங்கவிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### பாலினம், சமத்துவம் ஆகியவற்றை வலுப்படுத்தி

# பெண்களுக்கு அதிகாரமளிக்க சட்டமூலம்




பாலினம், சமத்துவம் மற்றும் பெண்கள் வலுவூட்டல் தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இந்த சட்டமூலத்தை உருவாக்குமாறு பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமைப்பிற்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



# ஒத்துழைப்பு...

பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான (GBV) உலகளாவிய செயல் முனைவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற பெண் பணியாளர்கள் செம்மஞ்சள் நிற சேலை அணிந்திருந்தனர்.

# இரவில் துப்பாக்கிப் பிரயோகம் சட்டத்தரணி உட்பட மூவர் கைது

பாணந்துறை, சில்வன் ஒழுங்கையில் புதன்கிழமை(30) இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில், மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் சட்டத்தரணி ஒருவரும் அடங்குகின்றார்.

கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்றதை அடுத்து, சந்தேகநபரான சட்டத்தரணியால் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதனால், அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

# பண்டிகைக் காலத்திலும் நாளாந்தம் மின்வெட்டு

ஆரம்பமாகும் பண்டிகைக் காலத்திலும் நாளாந்தம் மின்வெட்டை அமல்படுத்த நேரிடும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கமைய, நாளாந்தம் 02 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமல்படுத்தப்படவுள்ளது.

நீர் மின்சார உற்பத்தி மற்றும் நிலக்கரி கொள்வனவில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக தொடர்ந்தும் மின்சார உற்பத்தியில் சிக்கல் காணப்படுவதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக தெரிவித்தார்.

இதனிடையே, டிசெம்பர் 1ஆம் திகதி 02 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களுக்கு

தொடர்ச்சி P2

# நிரந்தர சமாதானத்துக்கு முழுமையான பங்களிப்பு

## கூட்டமைப்பிடம் தெரிவித்தார் அமெரிக்க தூதுவர்



நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திக்கொடுப்பதில் தமது முழுமையான பங்களிப்பை வழங்க எப்போதுமே தயாராக இருப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மனசாட்சியே இல்லையா?

உண்மையில் இந்த அரசாங்கத்துக்கு மனசாட்சி என்ற ஒன்று இல்லையா? நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி உள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் மக்கள் வாழவே முடியாத நிலையில் இருக்கிறார்கள். பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கு இல்லை. அவர்களுக்கு உண்பதற்குக்கூட உணவில்லை. பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு வசதியில்லாது இருக்கிறார்கள். மாணவர்கள் பாடசாலைகளில் மயங்கி விழுகிறார்கள். எனவே, நாட்டு மக்கள் இவ்வாறான நிலையில் இருக்கும்போது மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கக்கூடாது. மின்சாரக் கட்டணம் அதிகரிப்பது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## வரலாற்றில் முதல் தடவையாக...

2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பாராளுமன்றத்திற்கு வருகை தரும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக ஒரு குவளை பால் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ரயிலுடன் ஓட்டோ மோதியதில் பெண் உட்பட இருவர் பலி

எனினும், ரயில் வருவதை கவனிக்காத ஓட்டோ சாரதி, தண்டவாளத்தை கடந்துச் செல்வதற்கு முயன்றுள்ளார். இதன்போதே, வேகமாக வந்த ரயிலுடன் ஓட்டோ மோதி, தூக்கிவீசப்பட்டுள்ளது.

உடற்பாகங்கள் சிதறிய நிலையில் இவ்விருவரும் மரணமடைந்துள்ளனர். தண்டவாளத்தில் இருந்து பல அடி தூரத்துக்கு தூக்கிவீசப்பட்ட ஓட்டோ, தீப்பிடித்து முழுமையாக எரிந்துவிட்டது.

பெலியத்தவில் இருந்து அனுராதபுரம் நோக்கி பயணித்த ரயிலிலேயே ஓட்டோ மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## எம்.பியின் வீட்டில் கஞ்சா

பாராளுமன்ற கலரியில் மாணவர்கள் இருப்பதால் அதனை கூறுவதற்கு வெட்கமாக இருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினரின் வீடொன்றில் கஞ்சா பயிரிடப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களிலும், இணைய ஊடகங்களிலும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் இணைய ஊடகமொன்று வீடியோ ஒன்றையும் வெளியிடப்பட்டுள்ளது என்றார்.

சாதாரண நபரின் வீடொன்றில் கஞ்சா பயிரிடப்பட்டால் எவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் என்பது தெரியும். எனவே இது தொடர்பில் சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டுவர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## பண்டிகைக் காலத்திலும் நாளாந்தம் மின்வெட்டு

மின்வெட்டை அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள ஆணைக்குழுவின் தலைவர் இன்றும் (02) இரண்டு மணித்தியாலங்கள் 20 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுலில் இருக்கும் என்றார்.

அதனடிப்படையில், A-W வரையான வலயங்களில் பகல் வேளையில் ஒரு மணித்தியாலம் மற்றும் இரவு வேளையில் ஒரு மணித்தியாலம் 20 நிமிடங்களுக்கும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

## நிரந்தர சமாதானத்துக்கு முழுமையான பங்களிப்பு

> சர்வதேசத்தின் பங்களிப்பும், கண்காணிப்பும் அவசியம் என்பதை கூட்டமைப்பினர் எடுத்துக்கூறியுள்ளனர்.

சிவஞானம் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் இலங்கைக்கான அமெரிக்க தூதுவரை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போது வடக்கு கிழக்கின் நிகழ்கால நெருக்கடி நிலைமைகள் மற்றும் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர். நிரந்தரமான சமாதானம் ஒன்றினை எட்டும் வகையில் தீர்வுகளை நோக்கி பயணிக்க நினைக்கிறோம். அதற்கான சகல வாய்ப்புகளையும் நாம் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறோம். இதில் சர்வதேசத்தின் பங்களிப்பும், கண்காணிப்பும் அவசியம் என்பதை கூட்டமைப்பினர் எடுத்துக்கூறியுள்ளனர்.

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திக்கொடுப்பதில் தமது முழுமையான பங்களிப்பை வழங்க எப்போதுமே தயாராக இருப்பதாக இதன்போது தெரிவித்துள்ள அமெரிக்க தூதுவர், தமிழ் மக்களின் நீண்டகால அபிலாசனைகள் என்னவென்பது தமக்கு நன்றாக தெரியும் எனவும், அவற்றை பெற்றுக்கொடுக்க தமது கடமைகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## இரவில் துப்பாக்கிப் பிரயோகம் சட்டத்தரணி உட்பட மூவர் கைது

எனினும், சம்பவத்தை கேள்வியுற்று விரைந்து செயற்பட்ட பொலிஸார், நிலைமையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பயன்படுத்தப்பட்ட கைத்துப்பாக்கி, அதனை பயன்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் மற்றும் சட்டத்தரணியின் வாகனம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

துப்பாக்கிப் பிரயோகத்தின் போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை என தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## பாடசாலை விடுமுறை தொடர்பில் அறிவிப்பு

2022ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அதன்படி, மூன்றாம் தவணையின் முதலாம் கட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 22 திகதி வரை இடம்பெறும்.

பின்னர், எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி வரை பாடசாலைகளுக்கான விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் அடுத்த வருடம் ஜனவரி 2 ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வரை இடம்பெறும்.

தொடர்ந்து, ஜனவரி மாதம் 21 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட உள்ளதாக கல்வி அமைச்சு கூறியுள்ளது.

**விற்பனைக்கு**

3 படுக்கை அறைகள், தரையோடுகள் பதிக்கப்பட்ட இரண்டு மலசலக்கூடங்கள்,7.5 பேர்ச் பழைய வீடு, காலி வீதிக்கு மிக அருகாமையில், கோங்காவத்தை கல்கிசையில் விற் பனைக்கு உண்டு. 0766604582

## 6 ஆயிரம் மாணவர்கள் பெயில்

> தனியார் மேலதிக வகுப்புகளுக்கு செல்லும் மாணவர் ஒருவருக்கு சுமார் 30 ஆயிரம் ரூபாயைக் கட்டணமாக செலுத்துகிறார்கள்.

கல்வி அமைச்சு, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சுகளுக்கான வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் நேற்று (1) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும்போது பொறுத்தமான ஆசிரியர்களை மாற்றீடு செய்துவிட்டே இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தில் உரையாற்றும் அனைவரும் அதிபர், ஆசிரியர்களின் ஒய்வூதியப் பிரச்சினை, கொடுப்பனவு பிரச்சினைகள் தொடர்பில் பேசுகிறார்கள். நடைபெற்று முடிந்த சாதாரணதரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையாத 6 ஆயிரம் மாணவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு யார் பொறுப்புக் கூறுவது? 11 வருடங்கள் பாடசாலைகளில் கற்று எந்தவொரு பாடங்களிலும் சித்தியடையவில்லை என்றால் அதற்கு யார் பொறுப்பு? இது தொடர்பில் எவரும் பேசுவதில்லை எனவும் தெரிவித்தார்.

பாடசாலை உபகரணங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பேசுகிறார்கள். வரி அதிகரிப்பால் உபகரணங்கள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால், தனியார் மேலதிக வகுப்புகளுக்கு செல்லும் மாணவர் ஒருவருக்கு சுமார் 30 ஆயிரம் ரூபாயைக் கட்டணமாக செலுத்துகிறார்கள். இரு பிள்ளைகள் என்றால் செலவு எவ்வளவு? மேலதிக வகுப்புகளுக்கு செல்வதற்கான போக்குவரத்து செலவு எவ்வளவு? பாடசாலைகளில் முறையாகக் கல்வி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் இந்த செலவுகளைக் குறைக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

## பெண்களுக்கு அதிகாரமளிக்க சட்டமூலம்

பாராளுமன்றத்தில் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும், அரச மற்றும் தனியார் துறைகளும் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தினார்.

புதிய சட்டமூலத்தின் ஊடாக தேசிய பெண்கள் ஆணைக்குழு என்ற பெயரில் சுயாதீன ஆணைக் குழுவொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். இலங்கையின் முதலாவது அரச சபையில் பெண்களின் பிரதிநிதித்துவம் 2 வீதமாக இருந்ததாகவும், சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டு 91 வருடங்கள் கடந்துள்ள போதிலும் தற்போதைய பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5.3 வீதம் மட்டுமே எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று (01) பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றியபோதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

90 வருடங்களாக இரண்டு வீதத்தை 5 வீதமாக மட்டுமே உயர்த்தியுள்ளோம். எமது அரசியல் முறைமை இப்படித்தான் இருக்கிறது. ஆளும் கட்சியில் இருந்தும், எதிர்க்கட்சியில் இருந்தும் எமக்கு இதனை செய்ய முடியாமல் போனது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமக்கு இரண்டு வீத பெண் பிரதிநிதித்துவம் இருக்கும்போது ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்றத்தில்கூட அந்த இரண்டு வீதம் இருக்கவில்லை.

எமது சனத்தொகையில் 52 வீதமானோர் பெண்கள். பாராளுமன்றத்தில் 5.3 வீதமான பெண் பிரதிநிதிகளே இருக்கின்றனர். இங்குதான் பிரதான பிரச்சினை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்தப் பணிகளை முன்னெடுக்குமாறு பாராளுமன்ற பெண்கள் கூட்டமைப்பிற்கு பொறுப்பு கொடுத்தேன். விசேடமாக, பாலினம், சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலத்திற்கான கொள்கைகளை வகுக்குமாறு அறிவுறுத்தினேன். சட்டம் மற்றும் கொள்கை மறுசீரமைப்பு மற்றும் பெண்கள் உரிமை, பாலினம், சமத்துவம், ஆகிய விடயங்களுக்கு தலைமைத்துவம் வழங்குவதற்காக பாலினம் சமத்துவம் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்கத் தேவையான பங்களிப்புச் செய்வதற்கு பாராளுமன்றத்திற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்க வேண்டும். அதிகாரத்துடன் கூடிய தேசிய பெண்கள் ஆணைக்குழு என்ற பெயரில் சுயாதீன ஆணைக்குழுவொன்றை பாராளுமன்ற சட்டமூலத்தின் ஊடாக ஸ்தாபிக்க வேண்டும் என்றார்.

## "Sri Lanka First" கனவுக்காக அர்ப்பணிப்போம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் சக்வல (பிரபஞ்சம்) வேலைத்திட்டத்தின் கீழ் 41 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம் பெறுமதியான பாடசாலை பஸ் வண்டியொன்று மத்திய கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு நேற்று (01) நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டது.

அங்கு இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில், இந்நாட்டிலுள்ள நாற்பத்து மூன்று இலட்சம் பாடசாலை மாணவ,மாணவிகளுக்கு ஆங்கில மொழி,தகவல் தொழில்நுட்பம்,உயிரியல் தொழில்நுட்பம்,செயற்கை நுண்ணறிவு மற்றும் கணினி அறிவியலை வழங்குவதற்கான துரித திட்டம் நடைமுறைப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

,துரித வேலைத்திட்டத்தின் ஊடாக நாடளாவிய ரீதியில் புதிய தொழில்நுட்ப கற்கையை இந்நாட்டு பாடசாலை கட்டமைப்புக்குள் வியாபிப்பதாகவும்,அந்த பொறுப்பை மற்றவர்களுக்கு வழங்குவதுடன்,அதில் தானும் நேரடியாக தலையிடுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாரம்பரிய எதிர்க்கட்சியின் வகிபாகத்திற்குப் பதிலாக முற்போக்கு எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி செயற்படுவதாகவும்,

குறுகிய சட்டகத்திற்கு வெளியே ஒரு புதிய பாரம்பரியத்தை தான் அறிமுகப்படுத்தியதாகவும்,மூச்சு மற்றும் பிரபஞ்சம் ஆகிய வேலைத்திட்டங்கள் அதன் விளைவுகள் தான் எனவும் தெரிவித்தார்.

74 வருடங்களாக குறுகிய மனப்பான்மை யுடன்,பிற்போக்குத்தனமான, பின்நோக்கிய சிந்தனையில் நாட்டை வக்குரோத்தாக்கிய குழுவினரின் கருத்தோட்டம் பற்றி சிந்திக்காமல் உலகத்துடன் போட்டியிட வேண்டும் எனவும், அதற்குத் தேவையான திறமையான பிள்ளைகளும் குடிமக்களும் நம் நாட்டில் இருக்கிறார்கள் எனவும்,இவர்களை நம்பி புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அடிப்படை உரிமைகள் தொடர்பாக தம்மிடம் புதிய விளக்கமொன்றுள்ளதாகவும்,இதில் சிவில்,அரசியல் மற்றும் மனித உரிமைகள் போன்றன தவிர பொருளாதார,சமூக,மத மற்றும் கலாச்சார உரிமைகள் போன்றனவை தவிரவும் கல்விக்கான உரிமையையும் நாட்டின் அடிப்படை உரிமையாக மாற்றுவதாகவும்,அவ்வாறு மாற்றுவதன் பிற்பாடு எந்தப் பாகுபாடுமின்றி ஒவ்வொரு குழந்தையும் சமமான கல்வியைப் பெறக்கூடிய சூழ்நிலை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## சகலரும் இலங்கைக்கு கைகொடுக்க வேண்டும்

இலங்கைக்கு சீனா நல்ல நண்பனல்ல என கூட்டமைப்பின் உறுப்பினர் சாணக்கியன் எம்.பி நேற்று முன்தினம் சபையில் தெரிவித்திருந்த நிலையில் அதற்கு பதில் தெரிவிக்கும் விதமாகவே சீன தூதரகம் இதனை தெரிவித்துள்ளது. அவர்கள் இட்டுள்ள ட்விட் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதானது. " மன்னிக்கவும் எம்.பி, உங்கள் புரிதல் தவறானது மற்றும் முழுமையற்றது. கொவிட் 19 வைரஸ் தொற்றின் போது இலங்கைக்கு பாரிய ஒத்துழைப்புகளை வழங்கிய நாடாக நாமே உள்ளோம்". அத்துடன் உங்கள் மட்டக்களப்பு மாவட்டம் உட்பட, சகல பகுதிகளுக்கும் வாழ்வாதார நிவாரணங்களை நாம் வழங்கியுள்ளோம். அதுமட்டுமல்ல, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான பங்குதாரர் என்ற வகையில், ஐ.எம். எப் மற்றும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களை உடனடியாக இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு சீனா ஊக்குவித்து வருவதாகவும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. மேலும் நாட்டின் கடனை மறுசீரமைக்கும் முயற்சியில், இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர்களின் கூட்டங்களிலும் சீனா தீவிரமாக பங்கேற்றதாகவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியில் சீனாவின் நிதி நிறுவனங்கள் ஏப்ரல் மாதத்தில் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியை தாமதமின்றி தொடர்பு கொண்டதாகவும் இந்த முயற்சிகள் தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் சீனாவின் பல்வேறு வங்கிகளின் பணிக்குழுக்கள் நாட்டிற்கு விஜயம் செய்து வருவதாகவும், இருதரப்பு பேச்சுவார்த்தைகள் தொடர்வதாகவும் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

## எலிக்காய்ச்சல் பரவுதல் அதிகரிப்பு

வயல்களை அண்மித்த பகுதிகளில் துப்பரவு பணிகளில் ஈடுபடும் போது அவதானத்துடன் இருக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னர், குறித்த பகுதிகளிலுள்ள சுகாதார பணிமனைகளில் தேவையான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறு விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் கோரிக்கை விடுத்துள்ளார்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

# இனி சமூர்த்திக் கொடுப்பனவு இல்லை



சமூர்த்திக் கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதியில்லாது அக்கொடுப்பனவைப் பெறுவோரை சமூர்த்திக் கொடுப்பனவு பொறுவோர் பட்டியிலில் இருந்து நீக்க வேண்டுமென தெரிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவ்வாறு செய்தால் சமூர்த்திக் கொடுப்பனவுக்காக காத்திருப்போருக்கு அக்கொடுப்பனவை வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

சர்வஜன வாக்குரிமை கிடைத்து 91 வருடங்களாகிறது. இந்த 91 வருடகாலப் பகுதியில் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 2 சதவீதத்திலிருந்து வெறும் 5.3 சதவீதமாக உயர்த்தியிருக்கிறோம். இந்த பாராளுமன்றத்தில் இருந்த அனைவரும் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். பெண்களின் பாராளுமன்ற பிரதிநித்துவத்தை அதிகரிக்க நான் உள்ளிட்ட அனைவரும் தவறியிருக்கிறோம் என்றார்.

நாட்டின் சனத்தொகையில் 52 சதவீதமானவர்கள் பெண்களாக இருக்கிறார்கள். ஆனால் பாராளுமன்றத்தில் வெறும் 5.3 சதவீதத்திலேயே பெண்கள் இருக்கிறார்கள். இதுதான் இங்குள்ள பிரச்சினை எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். ஆடைத் தொழிற்சாலை, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் பெண்களின் பங்களிப்பு அதிகளவில் இருப்பதாகவும், நாட்டில் முழுமையான புதிய சிறுவர் பாதுகாப்பு சேவை ஒன்றை உருவாக்க வேண்டும். இந்த பொறுப்பு பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சமூர்த்தியைப் பெற தகுதியுள்ள பாரிய எண்ணிக்கையிலான பலர் அதனைப் பெறாது இருக்கிறார். சமூர்த்திக் கொடுப்பனவை பெற தகுதியில்லாதவர்கள் அதனைப் பெறுவதே இந்நிலைமைக்குக் காரணம். எனவே, சமூர்த்திக் கொடுப்பனவை பெறுவதற்கு தகுதியில்லாது அக்கொடுப்பனவை பெற்றுவருபவர்களை நீக்க வேண்டும். சிலர் 20 வருடங்களாக சமூர்த்தி கொடுப்பனவுக்கு காத்திருக்கிறார்கள். சிலர் இதனை அரசியலாகப் பார்க்கலாம். ஆனாலும் தகுதியில்லாதவர்களை நீக்க வேண்டும். நாம் எடுக்கும் சில தீர்மானங்கள் பிரபல்யமான தீர்மானங்களாக இல்லாமல் இருக்காலம். ஆனால் பாராளுமன்றத்துக்கு அந்த வேலையை செய்வதற்குப் பலமிருக்க வேண்டும் என்றார்.

பிள்ளைகளுக்கு

# கல்வியைக் கொடுப்பதா ? சாப்பாட்டை கொடுப்பதா ?

## பாரிய கஷ்டத்தில் பெற்றோர் என்கிறார் ரோகினி



ஆசிரியைகளை சாரி அணிய வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தில் ஆசிரியைகள் அணிய வேண்டிய ஆடைகள் தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அப்படி என்றால் ஆசிரியைகள் எதனை அணிவது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன கேள்வி எழுப்பினார். பிள்ளைகளுக்கு கல்வியைக் கொடுப்பதா அல்லது சாப்பாட்டை கொடுப்பதா என்ற பிரச்சினைகளே பெற்றோர்களுக்கு இப்போது இருக்கும் பெரும் பிரச்சினையாகும். பாடசாலை உபகரணங்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளன. இதனால் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை முதலாந் தவணைக்கு பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கு குறைந்தது 25 ஆயிரம்ரூபாய் தேவை எனவும் தெரிவித்தார்.

கல்வி அமைச்சு முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு நான் ஆதரவுகளை வழங்குவேன். ஆனால் கல்வி அமைச்சுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் திருப்தியடைய முடியாது. 32 பில்லியனே கல்வி அமைச்சுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது கல்வி அமைச்சை நிர்வகிக்கவே போதாது எனவும் தெரிவித்தார். பெயர் பலகைகளை நிர்மாணிக்க 20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தேசிய பாடசாலைகளுக்கு என்ன நடந்தது எனவும் கேள்வி எழுப்பினார்.

ஆசிரியைகளின் சாரி பிரச்சினையே கல்வியில் தற்போது பெரிய பிரச்சினையாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனை அரசாங்கத்தில் உள்ள அதிகாரிகள் சிலரே பெரிதுபடுத்தினார்கள். அரச அதிகாரிகளின் சீருடை தொடர்பில் நேற்று சுற்றுநிரூபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. ஆசிரியைகளை சாரி அணியச் செய்வதே இந்த சுற்றுநிரூபத்தின் நோக்கம். ஆனால் ஆசிரியைகள், அரச அதிகாரிகளின் சீருடைகள் தொடர்பில் இந்த சுற்று நிரூபத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மாறாக, 1989.02.01ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றுநிரூபம் அமல்ப்படுத்தப்படும் என நேற்று வெளியிடப்பட்ட சுற்றுநிரூபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1989ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றுநிரூபத்திலும் ஆசிரியைகளின் சீருடை தொடர்பில் எதுவும் குறிப்பிடவில்லை. அப்படி என்றால் பாடசாலைகளுக்கு வரும் ஆசிரியைகள் எதனை அணிவது எனவும் கேள்வி எழுப்பினார்.

### ரோஹினி கவிரத்னவின் கேள்வி

15 வயதுக்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளின் 20 சதவீதமானவர்கள் தங்களுக்கு நெருக்கமானவர்களாலேயே துஷ்பிரயோகப்படுத்தப்படுகிறார்கள். அதேபோல் 25 சதவீதமான பெண்கள் நெருக்கமானவர்கள், ஏனையோரால் துஷ்பிரயோகப்படுத்தப்படுகிறார்கள். இவ்வாறு பெண்களின் துஷ்பிரயோகங்களை தடுக்க வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா? என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன நேற்று சபையில் கேள்வி எழுப்பினார்.

# மூன்றிலிரண்டை நாம் தருகிறோம்

மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கான சட்டத்திருத்தங்களை அரசாங்கம் கொண்டுவருமாக இருந்தால் அதனைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள தேவையான மூன்றிலிரண்டு பெரும்பான்மையை எதிர்க்கட்சி வழங்கும் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றதின் நேற்றைய விவாதத்தின்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாண சபைகளில் கேட்க வேண்டிய கேள்விகளை பாராளுமன்றத்தில் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களாக மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படவில்லை. நாட்டில் மாகாணங்களுக்கான ஆளுநர்கள் இருக்கிறபோதிலும், மாகாணசபைகள் இல்லை எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் மாகாண ஆளுநர்களின் தவறுகளை சுட்டிக்காட்ட முடியாத நிலையொன்று ஏற்பட்டுள்ளது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் மாகாண சபைகளை அமைக்க முடியும். ஆனால், அரசாங்கத்துக்கு அதில் அக்கறை இல்லை. மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கான சட்டத்திருத்தங்களை அரசாங்கம் கொண்டுவருமாக இருந்தால் அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள தேவையான மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நாம் வழங்குவோம் எனவும் தெரிவித்தார்.



பிள்ளைகளுக்கு

# கல்விக்கான மையமாக மாற்றியமைக்க வேண்டும்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினருக்கு புனர்வாழ்வு வழங்கிவிட்டேன். தற்போது ஐக்கிய மக்கள் சக்தியை புனர்வாழ்வுக்குட்படுத்த வேண்டிய பணி மாத்திரமே எஞ்சியிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கல்வி அமைச்சு, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சுக்களுக்கான வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் நேற்று (1) கலந்துகொண்டு ஜனாதிபதி உரையாற்றிக்கொண்டிருந்தார்.

இலங்கை மாணவர்கள் வெளிநாடுகளுக்குக் கல்விகற்க செல்கிறார்கள். இதனால் வருடமொன்றுக்கு சுமார் 3 பில்லியன் நாட்டிலிருந்து செல்கிறது. பிராந்தியத்தில் கல்விக்கான மையமாக இலங்கையை மாற்ற வேண்டும். இது தொடர்பில் பாராளுமன்ற குழுக்களும், தேசிய பேரவையும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். தனியார் பல்கலைக்கழகங்களை நாட்டில் உருவாக்கி அதில் வசதியற்ற மாணவர்களும் கல்வி கற்ற இடமளிக்க வேண்டும். அவர்களுக்கான கட்டணங்களையும் அரசாங்கம் வழங்க வேண்டும். அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் உள்ள நிவாரண முறையின் கீழ் இவற்றை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# வெட்டுப்புள்ளி இன்று வெளிவரும்

எதிர்வரும் ஆண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் இன்று மாலை (நேற்று ) அல்லது நாளை காலை ( இன்று ) வெளியிடப்படும் என உயர்க் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். இதற்கான பணிகள் முழுமையாக நிறைவு பெற்றுள்ளதாகவும் சுரேன் ராகவன் தெரிவித்தார். இந்த வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் 44 ஆயிரம் மாணவர்கள் தமது உயர்க்கல்விக்காக பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க முடியாது



ஜனவரி 23ஆம் திகதி உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் இக்காலப் பகுதியில் மின்சாரத்தைத் துண்டிக்கவோ அல்லது மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கவோ முடியாதென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க அமைச்சரவை எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டிருந்தார். எனக்கும் இதில் பிரச்சினை இருக்கிறது. காரணம், அடுத்த வருடம் ஜனவரி 23ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி நடுப்பகுதி வரையில் உயர்தரப் பரீட்சை நடைபெற உள்ளது. எனவே இக்காலப்பகுதியில் மின்சாரத்தைத் துண்டிக்கவோ அல்லது மின்கட்டணங்களை அதிகரிக்கவோ முடியாது என்றார்.

3 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். இது தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் மின்சாரத்துறைக்கு பொறுப்பான அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுச் சென்று, மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் தளர்வுகளை ஏற்படுத்த வேண்டுமென வலியுறுத்துவேன் எனவும் தெரிவித்தார்.



மலையகத்தில்

# உயர்தரத்துக்கு செல்வோரின் எண்ணிக்கை குறைவு

மலையகத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் சிறப்பாக இருந்தாலும், உயர் தரத்துக்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக தெரிவிக்கும் நுவரெலியா மவாட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன், அடுத்த வருடம் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும். இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் முதுகெலும்பாக கல்வியே இருக்கிறது. 2015ஆம் ஆண்டு பிரதமராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கும்போது மலையக பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக அதிகளவான நிதியை அவர் ஒதுக்கீடு செய்துள்ளார் எனவும் சபையில் சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா மாவட்டத்துக்கென ஒரு பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்கிற கோரிக்கை இருக்கிறது. இதனை அமைத்துக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அடுத்த வருடம் முதல்

# மின்சாரத்தில் இயங்கும் மோட்டார்படகுகள் அறிமுகம்



மீனவர்கள் எதிர்கொள்ளும் எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் மின்சாரத்தில் இயங்கக் கூடிய மோட்டார் படகுகளை அடுத்த வருடம் முதல் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். சிறிய அளவிலான மீன்பிடியில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் பற்றரியில் பயன்படுத்தக் கூடிய 100 கிலோமீற்றர் பயணிக்கக் கூடிய மின்சார மோட்டார் படகை அறிமுகப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும், நாளொன்றுக்கு 86 ரூபா மாத்திரமே இதற்காக செலவு ஏற்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மண்ணெண்ணெய் மற்றும் டீசலைப் பயன்படுத்தும் படகுகளில் சூரியப்படலங்கள் மற்றும் காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். இதேவேளை, மக்களின் புரதத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதற்காக நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகளை விடுவதற்கான வேலைத்திட்டத்தை விரிவுபடுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அடுத்த வருடம் தெரிவு செய்யப்பட்ட 2500 நன்னீர் தேக்கங்களில் மீன் குஞ்சுகளை விடுவதற்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

# அமெரிக்காவின் தலையீடு உடனடியாக தேவை

■ க. அகரன்



தமிழர்களுக்கு அமெரிக்காவின் தலையீடு உடன் தேவைப்படுகிறது என்றும் சம்பந்தனும் சுமந்திரனும் சர்வதேச விசாரணையையும் அமெரிக்காவின் மத்தியஸ்தத்தையும் நிராகரித்து வருவதாகவும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் தெரிவித்தார்.

2112 நாளாக வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சங்கத்தினர், வியாழக்கிழமை (01) நடத்திய ஊடகசந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், “சிங்களவர்களிடம் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை, சிங்களவர்களிடம் இருந்து துன்பப்படும் தமிழர்களுக்கு எந்தவொரு தமிழனும் இணக்கமான தீர்வை எட்ட முடியாது.

இதற்கு ஒரே வழி அமெரிக்காவை அழைப்பது அல்லது குறைந்த பட்சம் நோர்வேயை அழைப்பதுதான். இந்தியாவுக்கான நோர்வே தூதுவர் அண்மையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்ய முன்வந்திருந்தார்.

எங்களில் சிலர் கடந்த கால வரலாற்றின் அடிப்படையில் நோர்வே மத்தியஸ்தத்தை விரும்பவில்லை என்பதை நாங்கள் அறிவோம், ஆனால் தற்போதைய சூழ்நிலையில் நோர்வே மத்தியஸ்தம் தமிழர்களுக்கு நன்மை பயக்கும், மேலும் இது மிகவும் அவசரமான தேவை.

கஜன் பொன்னம்பலத்தின் கருத்துப்படி, சர்வதேச மத்தியஸ்தத்தை நாம் அனைவரும் தவிர்க்கும் வகையில், மூன்று இனங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஆனால், காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் தமிழ்த் தாய்மார்களால் அவரது தத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

மிகவும் துணிச்சலான, சர்வதேச அரசியலையும் அதன் சுதந்திரப் போராட்ட வரலாற்றையும் நன்கு அறிந்த, நல்ல சிந்தனையாளர், நல்ல கருத்துக்களைக் கேட்கக்கூடிய, ஜனநாயகத்தை விரும்பி, மற்ற தமிழர்களுடன் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு புதிய தமிழ் தலைமை நமக்குத் தேவை” என்றார்.

# தமிழர்களின் உரிமைகளை மறுக்க சரத்வீரசேகர யார்?

## விடுகை விழாவில் தவிசாளர் ஜெயசிறில் கேள்வி

■ வி.ரி. சகாதேவராஜா



“தமிழர்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை மறுப்பதற்கு சரத் வீரசேகர யார்? எமது உரிமைகளை நாங்கள் கேட்கிறோம். இடையில் மறப்பதற்கு இவர் யார்?” என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கேள்வி எழுப்பினார்.

காரைதீவு மனித அபிவிருத்தி தாபன முன்பள்ளிப் பாடசாலையின் வருடாந்த விடுகை விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசுகையில் தவிசாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், “1960 களில் சிங்கள மக்களோடு தமிழ் மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக நிம்மதியாக வாழ்ந்த வரலாறு இருக்கிறது. ஆனால் இடை நடுவில் தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்க வேண்டும் அடக்க வேண்டும் என்று கருதி சரத்வீரசேகர போன்ற இனவாதிகள் போர்க்கொடி தூக்கிய காரணத்தினால் தான் தமிழ் மக்கள் ஆயுதம் தூக்கவேண்டி ஏற்பட்டது” என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நாட்டிலே அனைத்து இன மக்களும் சுதந்திரமாக நிம்மதியாக வாழ வேண்டுமாக இருந்தால் அதிகாரங்களும் உரிமைகளும் சகலருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்று அதற்கான காலம் ஓரளவு கனிந்து வருகின்ற வேளையிலே எண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைத்தது போல் சரத் வீரசேகர போன்ற இனவாதிகள் அதனை குழப்ப முயற்சிக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

இவர் போன்றவர்கள் இருக்கும் வரைக்கும் இந்த நாட்டிலே அமைதியோ நிம்மதியோ சுதந்திரமோ கிடைக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.




# கிண்ணியாவில் சுற்றுலா நீதிமன்றம் அங்குரார்ப்பணம்


■ ஹஸ்பர்

கிண்ணியா சுற்றுலா நீதிமன்றம், நீதிபதி பயாஸ் ராசாக்கினால் வியாழக்கிழமை (01) காலை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கிண்ணியா துறையடியில் அமைந்துள்ள, கிண்ணியா நகர சபைக்கு சொந்தமான வாடி வீட்டு கட்டிடம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குற்றவியல் (நீதிவான் நீதிமன்றத்துக்கு உட்பட்ட ) வழக்குகள் அனைத்தும் இங்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதுடன், ஒவ்வொரு வியாழக்கிழமை தோறும் வழக்கு விசாரணைகள் நடைபெறும்.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம்.கனி, கிண்ணியா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், சட்டத்தரணிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.




# “மனுஷி” சிறுகதை நூல் வெளியீடும் அறிமுகமும்


மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட ஊடகவியலாளரும் சுவிட்சர்லாந்துக்கு புலம்பெயர்ந்து நாட்டில் தமிழ் இலக்கியத் தளத்தில் இயங்கி வருபவருமான சண். தவராஜாவின் “மனுஷி” சிறுகதை நூல் வெளியீடும், அறிமுக நிகழ்வும் மட்டக்களப்பில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு மகுடம் கலை, இலக்கிய வட்டத்தின் பௌர்ணமி கலை, இலக்கிய நிகழ்வின் 47 ஆவது தொடராக எதிர்வரும் டிசம்பர் 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு (முழுமதி தினம்) இந்த நூல் வெளியீடும், அறிமுக நிகழ்வும் பிரபல இலக்கியவாதியும், படைப்பாளியுமான பேராசிரியர் செ. யோகராசா தலைமையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

புலம் பெயர் மற்றும் வெளி மாவட்டங்களில் உள்ளவர்களும் Zoom தொழிநுட்பம் வாயிலாக Zoom ID. 8997230363 மூலம் நிகழ்வில் இணையலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கருவுறுதல் விழிப்புணர்வு தினமும்

### வைத்தியர்கள் ரகுராமன், பாலகோபியின் குழந்தையின்மை நூல் வெளியீடும்




யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட பெண் நோயியல், மகப்பேற்றுத்துறை, சத்திரசிகிச்சைத் துறை இணைந்து கருவுறுதல் தொடர்பான விழிப்புணர்வு தினமும், வைத்திய கலாநிதி ரகுராமன், வைத்திய கலாநிதி பாலகோபி இணைந்து எழுதிய குழந்தையின்மை தொடர்பான புத்தக வெளியீடும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட கூவர் அரங்கத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அண்மைக் காலத்தில் குழந்தையின்மை என்பது திருமணமான தம்பதிகளைப் பொறுத்த வரையில் ஒரு சவாலாக இருப்பதுடன், இதனால் பாதிப்படைவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டு செல்கிறது.

இத்தகைய சந்தர்ப்பங்களை அவர்கள் எதிர்கொள்ள நேரிடும்போது அது தொடர்பான விளக்கங்களைப் பெறுவதற்கான போதுமானளவு பொறிமுறைகளும், வழிவகைகளும் நமது சமூகக் கட்டமைப்பில் இருக்கவில்லை.

எனவே இவ்விடயம் தொடர்பாக விழிப்புணர்வை சமூக மட்டங்களில் ஏற்படுத்துவதுடன் சமூக மட்டங்களில் இது தொடர்பான செயற்றிறனை அதிகரிக்கும் நோக்குடனேயே இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்படுகிறது.



# ரயிலுடன் வான் மோதி விபத்து; குடும்பஸ்தர் பலி

■ எம்.றொசாந்த், செந்துரன் பிரதீபன், எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில், ரயிலுடன் மினிவான் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் வான் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

வியாழக்கிழமை (01) மதியம் நடந்த விபத்தில் அரியாலையை சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான தனபாலசிங்கம் சுரேந்தர் (வயது 31) என்பவரே உயிரிழந்துள்ளார்.

ஏ.பி. வீதியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில், இந்த விபத்து இடம் பெற்றுள்ளதுடன், குறித்த கடவையில் பல விபத்து சம்பவங்கள் இடம்பெற்று உயிரிழப்புக்கள் ஏற்பட்ட போதிலும் அதனை பாதுகாப்பான கடவையாக மாற்ற எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மக்கள் குற்றம் சாட்டினர்.

விபத்து சம்பவத்தை அடுத்து விசாரணைகளை முன்னெடுக்க வந்திருந்த பொலிஸாருடன் அப்பகுதி மக்கள் வாக்கு வாதத்தில் ஈடுபட்டமையால், அங்கு குழப்பம் ஏற்பட்டது.

அதனை அடுத்து சம்பவ இடத்துக்கு மேலதிக பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடி படையினர் குவிக்கப்பட்டு, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.



# மாஞ்சோலை குறித்து மகஜர் கையளிப்பு

■ எம்.எம்.அஹமட் அனாம்.

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் எல்லைகளை அடையாளப்படுத்தி தந்துதவுமாறு கோரி, மாஞ்சோலை பிரதேச சமூக அமைப்புக்களினால் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராசாவிடம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

ஓட்டமாவடி வர்த்தக சங்கத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான ஏ.சீ. எம்.நியாஸ்தீன் ஹாஜியார் மற்றும் கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் கே.எல்.அஸ்மி தலைமையிலான குழுவினர் மகஜரைக் கையளித்தனர்.

அண்மைக்கால மாஞ்சோலை கிராம சேவகர் பிரிவிலுள்ள கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட காணிகளை கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகம் கையகப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதுடன், அத்துமீறி எல்லை இடும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனைக்கருத்திற்கொண்டே ஓட்டமாவடி பிரதேச செயலக எல்லையை அடையாளப்படுத்துமுகமாக இக்கோரிக்கை சமூக மட்ட அமைப்புக்களினால் விடுக்கப்பட்டுள்ளது.

## யாழ். பல்கலைக்கழகத்தில்

# வங்கியியலும் நிதியும் டிப்ளோமா கற்கைநெறி

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் முதல் முறையாக வங்கியியலும் நிதியும் டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

வங்கி மற்றும் நிதித் துறைகளில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கும், இத் துறைகளில் இணைய விரும்புவோருக்கும் அடிப்படை அறிவினையும், அங்கீகரிக்கபட்ட தராதரத்தையும் வழங்கும் நோக்குடன் இது ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த டிப்ளோமா கற்கை நெறியின் உத்தியோகபூர்வ அறிமுக நிகழ்வுயாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் சனிக்கிழமை (03) காலை 09.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கற்கை நெறியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் ஊடாக நடாத்துவதற்கான ஏற்பாடுகளை முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் மேற்கொண்டுள்ளது.

# கடலட்டை பண்ணைகளை அகற்றக் கோரி போராட்டம்



■ 06. எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அனலைதீவு  பருத்தித்தீவு பகுதியில் கடற்றொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணைகளை உடன் அகற்றுமாறு கோரி, அப்பகுதி கடற்றொழிலாளர்கள் தொழில் நடவடிக்கையை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடலட்டை பண்ணைகளை அகற்றும் வரை தமது போராட்டம் தொடரும் என அறிவித்துள்ள அனலைதீவு கடற்றொழிலாளர்கள், புதன்கிழமை (30) முதல் கடற்றொழில் செயற்பாடுகளைப் புறக்கணித்துள்ளனர்.

## இரு பொலிஸாரின்

# நினைவேந்தல் அனுஷ்டிப்பு



■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, வவுணதீவு வலையிறவு பொலிஸ் சோதனைச் சாவடியில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட இரு பொலிஸாரின் 4ஆம் ஆண்டு நினைவேந்தல், புதன்கிழமை (30) இரவு வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தலைமையில் பொலிஸ் நிலையத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

அவ்விருவரினதும் திருவுருவப் படத்துக்கு மலர் தூவி சுடர் ஏற்றி, பொலிஸார் மௌன அஞ்சலி செலுத்தினர்.

# கால்கள், பற்கள் அகற்றப்பட்ட சிறுத்தையின் உடலம் மீட்பு

ரஞ்சித் ராஜபக்ஷ



பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொகவந்தலாவை தோட்டத்தின் தேயிலை மலையொன்றிலிருந்து சிறுத்தை ஒன்றின் உடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று (1) காலை மீட்கப்பட்ட குறித்த சிறுத்தையின் உடலத்தில் இருந்து பற்கள், தோல், நான்கு கால்கள் என்பனவும் வெட்டி அகற்றப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

மிருக வேட்டையில் ஈடுபடும் சிலர் தேயிலைத் தோட்டங்களில் பொறிகளை வைப்பதாகவும் இதில் சிறுத்தைகளும் சிக்கி உயிரிழப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும், குறித்த சிறுத்தை உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை எனத் தெரிவித்துள்ள பொகவந்தலாவை பொலிஸார், இது தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு நல்லத்தண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவித்தனர்.

# மாத்தளையில் 25 பேர் கைது

மஹேஸ் கீர்த்திரத்ன

போதைப் பொருள் குற்றச்சாட்டு தொடர்பில் கடந்த நவம்பர் மாதத்தில் மாத்தளை பொலிஸ் பிரிவுக்குள் 25 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மாத்தளை பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மாத்தளை நகரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் போதைப் பொருள் விற்பனை, போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் மாத்தளை பகுதிக்கு போதைப் பொருளை விநியோகிக்கும் பிரதான நிலையம் ஒன்று, களுதாவளை-நரிகந்த பிரதேசத்தில் சுற்றிவளைக்கப்பட்டதுடன், இதன்போது பெண்ணொருவர் உள்ளிட்ட 6 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந் தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தி, அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுத்துள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

## மதுபானசாலைக்கு

# அனுமதியை வழங்காதே

### நில்தண்டாஹின்னா நகரில் போராட்டம்



எஸ்.கணேசன்

வலப்பனை-நில்தண்டாஹின்னா நகரில் மற்றுமொரு மதுபானசாலையை திறப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என வலியுறுத்தி நில்தண்டாஹின்னா நகரில் நேற்று (1) ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நில்தண்டாஹின்னா நகர வாசிகளும், அதனை சூழவுள்ள கிராமங்களில் வாழும் மக்களும் இணைந்தே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

நில்தண்டாஹின்னா நகரில் ஏற்கனவே மதுபானசாலையொன்று உள்ள நிலையில், மற்றுமொரு மதுபானசாலையை திறப்பதற்கு அனுமதி பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதனால் இப்பகுதியில் சமூக நெருக்கடி - பிரச்சினைகள் உருவாகலாம் எனவும், இளைய சமுதாயம் சீரழிக்கப்படலாம் எனவும் சுட்டிக்காட்டினர்.

குறித்த நகரத்துக்கு பல அத்தியாவசிய விடயங்கள் தேவைப்படும் நிலையில், எதற்காக மதுபானசாலை திறப்பதற்கு உடனடியாக அனுமதி வழங்கப்பட வேண்டும் என கேள்வி எழுப்பியதுடன், அந்த அனுமதி பத்திரம் இரத்து செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தால் நில்தண்டாஹின்னா நகரின் இயல்பு நிலை ஸ்தம்பிதமடைந்தது. போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

# கோணமுட்டாவ தோட்டத்தின் பிரச்சினைக்கு செந்தில் தீர்வு

பண்டாரவளை-கோணமுட்டாவ தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் குறித்த தோட்ட நிர்வாகத்துடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடலில் ஈடுபட்டு தீர்வைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

கோணமுட்டாவ தேயிலை தொழிற்சாலையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில்,தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்ட அரை சம்பளம் முழு சம்பளம் வழங்க நிர்வாகம் ஒப்புதல் வழங்கியது.

அத்துடன் 20 கிலோ கொழுந்து பறிப்பதை வலுக்கட்டாயமாக நிர்ணயிக்க முடியாது எனவும், தேயிலை மலைகளுக்கு ஏற்ற வகையிலே நிர்ணயிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து, 20 அடிப்படை தொகை 16 கிலோவாக குறைக்கப்பட்டது.

ஒவ்வொரு நிலுவைக்கும் வலுக்கட்டாயமாக 3 கிலோ தேயிலை குறைப்பு - நாளை முதல் 1 கிலோவாக மாற்றி அமைக்கப்பட்டதுடன், .ஞாயிறு மற்றும் போயா நாட்கள் 1 1/2 சம்பளம் வழங்குவதாக ஒப்புக்கொள்ளப்பட்டது

இவ்வாறு தோட்ட நிர்வாகத்தால் வழங்கபட்ட ஒப்புதலை ஏற்று ,இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத்தில் இருந்து தேயிலை தூளை ஏற்றுமதிக்கு வெளியேற்ற அனுமதி வழங்கியது.



# மலையகத்தில் கடும் வெப்பம்

கெதீ.பெருமாள்

மலையகத்தில் சில நாள்களாக கடும் வெப்பமான வானிலை நிலவுகின்றது.

இதனால் நீரேந்து பகுதியில் உள்ள அனைத்து நீர்த் தேக்கங்களினதும் நீர் வரத்து குறைந்துள்ளதால், நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

நீர்த்தேக்கங்கள் அதன் கொள்ளளவை விட, சுமார் எட்டு முதல் பத்து அடி வரை குறைவடைந்துள்ளது.

இவ்வாறு தொடர்ச்சியாக கடும் வெப்பம் நிலவினால் நீர் மின் உற்பத்தி பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்படுமென நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.





### இலவச மூக்குக் கண்ணாடிகள்

கண்டியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் அப்துல் கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையின் இலங்கைக் கிளையினால், வசதி குறைந்த குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. கஹகொல்ல பெருந்தோட்ட திருமறை கலாமன்ற பணிமனை மண்டபத்தில் மூக்கு கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.
(மொஹொமட் ஆஸிக்)

## ஹட்டன்– டிக்கோயா நகர சபையின்

# விலைமனு கோரல் மூலம் ரூ.10 மில்லியன் வருமானம்

சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன்- டிக்கோயா நகரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான இறைச்சிக் கடைக்கான டெண்டர் ( கேள்வி மனு விலைப்பத்திரம்) மூலம் பத்து மில்லியன் ரூபாய்க்கு அதிகமான பணம் கிடைத்துள்ளது.

ஹட்டன்- டிக்கோயா நகரசபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரன் தலைமையில் அண்மையில் கேள்வி மனுக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, ஹட்டன் நகரிலுள்ள மாட்டிறைச்சி கடை எழுபத்தாறு இலட்சத்து நூறு ரூபாவுக்கும், டிக்கோயா நகரிலுள்ள மாட்டிறைச்சிக் கடை இருபத்தி இரண்டு இலட்சத்து ஐம்பத்தி இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கும், ஹட்டன் நகரிலுள்ள ஆட்டிறைச்சிக் கடை ஆறு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாவுக்கும், டிக்கோயா நகரிலுள்ள ஆட்டிறைச்சிக் கடை மூன்று இலட்சத்து ஐம்பத்தாயிரம் ரூபாவுக்கும் டெண்டர் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த நகரசபை தவிசாளர் சடையன் பாலச்சந்திரன், இந்த இறைச்சிக்கடைக்களுக்கான கேள்வி மனு கோரல் விடப்பட்டதன் மூலம் அதிகமான தொகை கிடைத்துள்ளதாகவும், அந்த பணத்தை நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## தலவாக்கலை த.ம.வியில்

# 91 சதவீத மாணவர்கள் உயர்தரம் கற்க தகுதி

சுஜிதா

வெளியாகியுள்ள க. பொ. த (சா/த) பரீட்சை பெறுபேறுகளுக்கமைய தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 149 மாணவர்களுள் 91 சதவீதமானவர்கள் உயர்தரம் கற்பதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் 7 மாணவர்கள் 9 பாடங்களிலும் A தர (9/A) சித்தியை பெற்றுள்ளனர்.

இதற்கமைய, சிவராஜ் லக்ஷான், காளிமுத்து டிலுஷான், சிவனேஸ்குமார் ரிஷிகேஸ், முரளிதரன் ருமேதன், மனோகர் கவிஷாலினி, விஸ்வநாதன் வியாஷினி, பாஸ்கர் எனிதம் ஆகிய மாணவர்களே 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

# சத்தியப் பிரமாணம்

ஆ.ரமேஸ்



அகில இலங்கை சமாதான நீதவானாக பெரியசாமி செந்தில் குமார் நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (30) சத்தியப் பிரமாணம் செய்துக் கொண்டர்.இவர் தனது ஆரம்பக்கல்வியை கொத்/ கலைவாணி தமிழ் வித்தியாலயத்திலும் உயர்க்கல்வியை கொத்/ லபுக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திலும் கற்ற இவர் பேராதனை பல்கலைக் கழகத்தில் இளமாணி பட்டத்தை பெற்றுள்ளார்.

## மொனராகலை மாவட்ட செயலகத்தில்

# பயன்பாடின்றி வீணாகி போகும் வாகனங்கள்



சுமணசிறி குணதிலக

பல கோடி ரூபாய் பெறுமதியான வாகனங்கள் மொனராகலை மாவட்ட செயலக வளாகத்தில் வீணாகிப் போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த செயலக வளாகத்தில் பல்வேறு வகையான 11வாகனங்கள் மழைக்கு நனைந்து, வெயிலில் காய்ந்து இவ்வாறு வீணாகிப் போவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய லொறி, பௌசர், ஜீப் வண்டிகள் இரண்டு, கெப் வாகனங்கள் 3 இவ்வாறு வீணாகிப் போயுள்ளன.

இவற்றில் சில வாகனங்கள் முழுமையாக வீணாகிப் போயுள்ளதுடன்

இந்த வாகனங்களை ஏலத்தில் விடுவதிலும் இழுத்தடிப்புகள் காணப்படுவதாக செயலகப் பணியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் மொனராகலை பதில் அரசாங்க அதிபரிடம் வினவியபோது, குறித்த வாகனங்கள் தொடர்பில் மோட்டார் வாகன பரிசோதகரிடம் சான்றிதழைப் பெற்று ஏல விற்பனைக்கு விட நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

## உள்ளூர் சந்தைகளில் மரக்கறிகளின்

# விலை தொடர்ந்து உயரும் அபாயம்

ரஞ்சித் ராஜபக்ஸ



எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் தேவைக்கு ஏற்ப மரக்கறிகளை வழங்க முடியாத காரணத்தினால், உள்ளூர் சந்தையில் மரக்கறிகளின் விலை தொடர்ந்தும் உயரும் என அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் சங்கத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி வலியுறுத்தியுள்ளார்.

கிறிஸ்மஸ் காலத்தில் சந்தைக்கு மரக்கறிகளை விநியோகிக்க முடியாத நிலையில் உள்ளூர் சந்தையில் மரக்கறிகளின் விலை தொடர்ந்தும் உயரும் என்றும் அவர் தெரிவித்தார்.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று (30) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், நாட்டின் ஆட்சியாளர்களினால் நாட்டின் விவசாயத்துக்கு ஏற்பட்ட அழிவுகளினால் மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டிருந்த சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் பலர் தற்போது மரக்கறிச் செய்கையை விட்டு வெளியேறியுள்ளனர்.

இக்காலத்தில் ஒரு கிலோ கிராம் உள்ளூர் உருளைக்கிழங்கு 440 ரூபாவுக்கு அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்படுவதுடன், கரட், வெண்டைக்காய் உள்ளிட்ட மலையக மற்றும் தாழ்நில மரக்கறிகளின் அதிக கொள்முதல் விலையினால் மரக்கறிகளின் சில்லறை விலையும் அதிகரித்துள்ளது.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்திற்கு வெளியில் உள்ள மாகாணங்களில் உள்ள பொருளாதார நிலையங்களுக்கு நாளாந்தம் இரண்டரை இலட்சம் கிலோ கிராம் மரக்கறிகள் விநியோகிக்கப்பட்ட போதிலும் தற்போதைய நிலைமை காரணமாக நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் நாளாந்த மரக்கறி விநியோகம் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும் நுவரெலியா பிரதேசத்தில் இரசாயன உரம் விற்பனை செய்யும் கடைகளில் ஐம்பது கிலோ கிராம் இரசாயன உரம் மூட்டை இருபத்து மூவாயிரம் ரூபாய் என்ற அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் அந்த விலைக்கு இரசாயன உரங்களை கொள்வனவு செய்து மரக்கறிகளை பயிரிட்டு விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்திக்கின்றனர்.

இந்நாட்டு விவசாயிகளுக்கு பசுமை வீடுகள், நவீன விவசாய உபகரணங்கள் மற்றும் ஜப்பானிய அரசாங்கத்தின் தொழில்நுட்பம் போன்றவற்றை வழங்குவதற்கு ஜப்பானிய அரசாங்கம் விருப்பம் தெரிவித்த போதிலும், அதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை என்றார்.

## பேராதனைப் பல்கலைக்கழகத்தைப் பார்வையிட

# 4,500 மாணவர்கள் இரண்டு நாட்களில் வருகை தந்தனர்

ஷேன் செனவிரத்ன

பேராதனைப் பல்கலைக்கழகத்தைப் பார்வையிடுவதற்காக பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிக்கு அமைய, நேற்றும் (1) நேற்று முன்தினமும் (30) அதிகளவான மாணவர்கள் நாடுபூராகவும் இருந்து வருகைத் தந்திருந்தனர்.

இதற்கமைய 28 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 4,500 மாணவர்கள் வருகைத் தந்திருந்தனர் என பேராதனைப் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மைக்கால வரலாற்றில் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு இவ்வளவு மாணவர்கள் வருகை தந்ததில்லை எனத் தெரிவித்த பேராதனை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் அபேவிக்ரம, மாத்தறை, வலஸ்முல்ல, காலி, இரத்தினபுரி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பல பாடசாலைகள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னர் பல்கலைக்கழகத்துக்கு வருகை தருவதற்கு அனுமதி கோரியுள்ளதாகவும் அவர் கூறினார்.

# பிள்ளைகளின் மந்தபோசணை எதிர்காலத்தையே மந்தமாக்கும்

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்று பலரும் கூறுவார்கள். அதனால்தான், பிள்ளைகளின் மீதான கரிசனையை ஒவ்வொருவரும் மிக ஆழமாகக் காண்பித்துக் கொண்டே இருப்பர். குறிப்பாக, ஐந்து வயதுக்கும் குறைந்தவர்களுக்கு போசாக்குடன் கூடிய உணவுகளை வழங்குவதன் ஊடாக, எதிர்காலத்தில் திடகாத்திரமான இளம் சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும்.

வழங்கும் போசாக்கான உணவுகளால், நோய்நொடிகளற்ற பிள்ளைகளாக வளர்த்தெடுக்க முடியும். கிரகிக்கும் தன்மைமையும், சுயமாகச் சிந்தித்து செயல்களைத் தொடங்கும் ஆற்றலும் அதிகரிக்கும். விளையாட்டில் ஆர்வம் காட்டுவர், கல்வி கற்பதிலும் ஊக்கம் பெறுவர்.

எனினும், கிடைக்கும் தகவல்களின் பிரகாரம் மந்தபோசணைக்கு உள்ளான சிறார்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 5 வயதுக்கும் குறைந்த பிள்ளைகளில், நிறை குறைந்தவர்களின் எண்ணிக்கை 15 சதவீதமாகவும் உயரம் குறைந்தவர்களின் எண்ணிக்கை 2 சதவீதமாகவும் அதிகரித்துள்ளதென சுகாதார தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி, மந்தபோசணைக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது. எனினும், ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் நலன் தொடர்பிலாவது ஆகக் கூடுதலான கவனத்தை செலுத்தவேண்டியது விடயதானத்துக்குப் பொறுப்பானவர்களின் தார்மீகக் கடமையாகும்.

இல்லையேல், எதிர்கால சந்ததியினரை திடகாத்திரம் மிக்கவர்களாக வளர்த்தெடுக்க முடியாத நிலைமையொன்று ஏற்படும். நாளொன்றைக்கு கோழி முட்டையொன்றை வழங்க முடியாத இக்கட்டான நிலைமைக்குள் ஒவ்வொரு குடும்பத்தினரும் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றனர். இதில், ஏனைய புரத உணவுகளை ஊட்டுவது எட்டாக்கனியாவே இருக்கிறது.

அதாவது பசிவந்து அந்த பசியை தீர்க்க உணவு கிடைக்காத மனிதன் தன்னிடமுள்ள மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, காமம் ஆகியவற்றை இழந்துவிடுவான். ஒருவேளை உணவு கிடைக்காதவர்கள் பலர், ஏதோவொன்றை இழந்துகொண்டுதான் இருக்கின்றனர்.

குழந்தைகளுக்கும் பிள்ளைகளுக்கும் பசி ஏற்பட்டால், வீடே அல்லோலமாகிவிடும். அழுது புரண்டு பெரும் களேபரத்தையே ஏற்படுத்திவிடுவர். அவர்களுக்கு பசிவந்தால் பத்து அல்ல, பலதுமே பறந்துவிடும்.

விரும்பி உண்ணும் பிஸ்கட்டுகளின் விலைகளும் தலைக்கு மேலேறிவிட்டன. ஆசைக்கு எதனையும் சாப்பிடமுடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், சில பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், சதொசவுக்குச் சென்றால், அங்கு தரமான பொருட்கள் கிடைப்பதில்லை. விலை குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் பொருட்கள் சில சதொச நிலையங்களில் காணக் கிடைப்பதே இல்லை. மந்தபோசணையால் பாதிக்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின், நிலைமை இன்னுமே மோசமடையும்.

ஆகையால், நாட்டின் எதிர்கால பிள்ளைகளை மந்தபோசணையில் இருந்து மீண்டெழச் செய்வதற்கு உரிய வேலைத்திட்டங்களை முன்வைக்கவேண்டும். அதற்கான உரிய கட்டமைப்புகளை உருவாக்கவேண்டியது விடயதானத்துக்கு பொறுப்பானவர்களின் முன்னிலையில் இருக்கும் சவாலாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

எல்லாத் தேவைகளும் ஆடம்பரம் நிறைந்ததாக இருந்தாலும் கூட, கடவுளிடம் ஏகப்பட்ட கோரிக்கைகளை ஒன்றன்பின்னர் ஒன்றாக மனிதர்கள் வைக்கின்றார்கள்.

கடவுளிடம் இலஞ்சம் தருவதாகப் பேரம் பேசுவதுபோல், 'இந்த வேலையை முடித்துத் தந்தாய் என்றால், பல இலட்சம் செலவில் தர்மகாரியங்கள், பூஜைகள் செய்வேன்' எனப் பெரிய வேண்டுதல்களைச் செய்வார்கள்.

சகல உயிர்களையும் காக்கும் தெய்வத்தை, வியாபாரம் செய்வதுபோல் அறியாமையில் பேசும் நபர்கள் சுயநலமுடைய அறிவிலிகள்.

நேர்மையுடன், பக்தியுடன் வேண்டுவதற்கும் ஆணவத்துடன் 'இதைத் தா, நான் செய்வேன்' என வேண்டுவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இரண்டாது வெட்கப்பட வேண்டிய முறையாகும். கடவுளிடம் பக்தியுடன் எதைக் கேட்டாலும் கேட்காது விட்டாலும், கடவுள் கிருபை செய்தபடியேதான் இருக்கின்றார் என்பதில் ஏது ஐயம்?

எதையும் செய்யாமல் சோம்பித் திரிபவர்கள், குடும்பத்தினரைக் கண்டுகொள்ளாமல் மனம்போன போக்கில் சுற்றித் திரிந்து, அறவழி நடக்காதவர்களை எவர்தான் விரும்புவார்?

எதையாவது பெறத்தான் விரும்பும் சிலர், கொஞ்சமாவது மக்களை நேசிக்கும் பண்பை ஏன் கண்டுகொள்வதில்லை? மனிதன் தனித்தவன் இல்லை; சகலருடனும் இணைந்து செயலாற்ற வேண்டியவன்.

-பருத்தியூர் பாலெ. வயிரவநாதன்

வலது தீவிரவாதத்தின் நிழலில் – 4:

# கால்பந்துக் குண்டர்களும் வலது தீவிரவாதமும்




தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ


இந்த வாரம் பெல்ஜியத்திலும் நெதர்லாந்திலும் அரங்கேறிய காட்சிகள் வலது தீவிரவாதத்தின் இன்னொரு பக்கத்தை எமக்குக் காட்டின. கால்பந்து உலகக் கிண்ணத்தின் போது பெல்ஜியம் மொரொக்கோ அணிகளுக்கு இடையிலான போட்டியின் முடிவில் பெல்ஜியத்திலும் நெதர்லாந்திலும் வன்முறை வெடித்தது.

நடைபெற்ற போட்டியில் எதிர்பாராத விதமாக மொரொக்கோ அணி பலம் வாய்ந்த பெல்ஜியம் அணியை வெற்றி கொண்டது. கணிசமானளவு மொரொக்கோ தேசத்தவர் பெல்ஜியத்திலும் நெதர்லாந்திலும் வாழ்கிறார்கள். அவர்கள் வெற்றியைக் கொண்டாடுவதைப் பொறுத்துக்கொள்ளவியலாதோர் வன்முறையில் ஈடுபட்டனர்.

இவ்வன்முறை பெல்ஜியத்தின் பல நகரங்களிலும் நெதர்லாந்தின் பிரதான நகரங்களிலும் அரங்கேறியது. இந்த வன்முறைகளின் பின்னே வலது தீவிரவாதம் முக்கிய காரணியாகும். குடியேறி மொரொக்கோ முஸ்லீம்கள் எங்களைத் தோற்கடித்துவிட்டார்கள் என்பது பெல்ஜியர்களில் ஒரு தொகுதியினரின் கோபமாக இருந்தது. அது கலகமாகவும் வன்முறையாகவும் மாறுவதற்கு இஸ்லாமோபோபியாவும் குடியேற்றவாசிகளுக்கு எதிரான மனோநிலையும் ஒருங்கே காரணமாகின.

இந்நிகழ்வின் முக்கியத்துவத்தை மூன்று அடிப்படைகளில் நோக்கவியலும். முதலாவது, பலத்த வன்முறை பெல்ஜியத் தலைநகர் பிரஸல்ஸில் அரங்கேறியது. கலகக் தடுப்புப் பொலிஸார் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் வன்முறையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். பிரஸல்ஸில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இதயம் என அழைக்கப்படுவது. ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்றம், நிர்வாகக் கட்டம் என அனைத்தும் அங்கேயே அமைந்துள்ளது. எனவே வலதுதீவிரவாதம் ஐரோப்பிய ஒன்றியத்தின் இதயத்தில் அரங்கேறியுள்ளது. இது பெல்ஜிய அரசியல்வாதிகளுக்கும் ஐரோப்பிய ஒன்றிய ஆதரவாளர்களுக்கும் மிகப்பெரிய நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

இரண்டாவது, பெல்ஜியம் தோற்றதிற்கு நெதர்லாந்து ரசிகர்கள் ஏன் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்ற வினா எழுவது இயற்கையானது. இதற்குப் பிரதான காரணம் நெதர்லாந்தில் உள்ள மொரொக்கோ நாட்டவர் வெற்றியைக் கொண்டாடுவதை ஒரு தொகுதி ரசிகர்கள் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இரண்டாவது நெதர்லாந்தில் பிறந்து வளர்ந்த மெரொக்கோ தேசத்தவரான *Hakim Ziyech* மொரொக்கோ தேசிய அணிக்கு விளையாடுகிறார். இவர் நெதர்லாந்து, மொரொக்கோ ஆகிய இருநாடுகளுக்கும் விளையாடுவதற்குத் தகுதி பெற்றிருந்தபோதும் அவர் மொரொக்கோ தேசிய அணியில் விளையாட முடிவு செய்தார். இது பல நெதர்லாந்து கால்பந்து ரசிகர்களுக்கு ஏமாற்றமளித்தது. மூன்றாவது ஐரோப்பியர்களை முஸ்லீம்கள் வெற்றிகொள்கிறார்கள் என்பதை கால்பந்துக் குண்டர்களால் (ஆங்கிலத்தில் *Hooligans*) ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மூன்றாவது முக்கிய காரணி இந்த கால்பந்துக் குண்டர்களுக்கும் வலது தீவிரவாதத்திற்கும் இருக்கின்ற நெருக்கமான உறவு. இது பெரியளவில் பேசப்படுவதில்லை. இந்தவாரம் நடைபெற்ற வன்முறையை விளையாட்டுச் சார்ந்த ஒரு வன்முறையாகவே காட்சிப்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. கால்பந்துக்கும் வன்முறையில் ஈடுபடும் இக்குண்டர்களுக்கும் வலது தீவிரவாதத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு.

கடந்த இருபதாண்டுகளில், கால்பந்து குண்டர்கள் தங்கள் சொந்த தெரு அடிப்படையிலான அரசியல் குழுக்களை உருவாக்கி, வெளிப்புற இலக்குகளுக்கு எதிராக போக்கிரி கலாச்சாரத்தின் பழங்குடிப் பெருமையின் அடிப்படையில் வன்முறையை ஆயுதமாக்குகின்றனர். இங்கிலாந்தில் இங்கிலீஷ் டிஃபென்ஸ் லீக் மற்றும் ஃபுட்பால் லாட்ஸ் அலையன்ஸ் போன்ற இயக்கங்களின் எழுச்சி ஓர் உதாரணம். அதேவேளை சலாஃபிஸ்ட்டுகளுக்கு எதிரான ஜெர்மனியின் ஹூலிகன்ஸ் இன்னோர் உதாரணம். இதில் கவனிக்க வேண்டியது யாதெனில் தங்கள் சொந்த ஆதரவுக் கழகங்களுக்கான மோதலில் ஈடுபடும் இந்தத் தீவிர ஆதரவாளர்கள், இஸ்லாமிய தீவிரவாதத்தை எதிர்ப்பது என்ற பொதுத்தளத்தில் ஒன்றுபட்டுள்ளனர்.

இது குறித்து விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட ரோனி ப்ளாஷ்கே 'வலதுசாரி தீவிரவாதம் என்பது ரகசியமாக நடக்கும் ஒரு நிரந்தர நிகழ்வு' என்று கூறுகிறார். இவர் ஜேர்மனியில் கால்பந்து போக்கிரித்தனத்திற்கும் வலதுசாரி தீவிரவாதத்திற்கும் இடையேயான தொடர்பை தனது 'வலதில் இருந்து தாக்குதல் - கால்பந்தில் அரசியல் தீவிரவாதிகள்' என்ற புத்தகத்தினூடாக தனது ஆய்வுகளை வெளியிட்டுள்ளார். இந்நூல் சில முக்கியமான செய்திகளைச் சொல்கிறது. ஜேர்மனியில் அதிகமான புலம்பெயர்ந்தோர் இருப்பதாக 49 சதவீத ஜேர்மனியர்கள் கருதுவதாக சமீபத்திய கணக்கெடுப்பை மேற்கோள் காட்டும் பிளாஷ்கே, லீப்ஜிக்கில் கால்பந்து குண்டர்களால் உருவாக்கப்பட்ட இனவெறி இலக்கியத்தின் விரிவான தன்மையையும் அவ்விலக்கியத்திற்கான பரந்துபட்ட ஆதரவையும் கவனிக்க வேண்டும் என்று கூறுகிறார். 'விளையாட்டு மைதானத்தின் உள்ளே அவ்வாறான வெளிப்படையான இனவெறியை காணக் கிடைப்பதில்லை, ஆனால் மக்கள் அந்த அணுகுமுறைகளை இழந்துவிட்டார்கள் அல்லது மக்கள் திடீரென்று சகிப்புத்தன்மையுடன் இருக்கிறார்கள் என்று அர்த்தமல்ல' என்று அவர் குறிப்பிடுகிறார்.

வலதுசாரி ஜேர்மனிய அரசியல் இயக்கத்திற்கும் கால்பந்துக் குண்டர்களுக்கும் இடையிலான உறவென்பது வலதுசாரித் தீவிரவாத இயக்கத்திற்கான பாதுகாவலர்களாக இக்குண்டர்கள் செயற்படுவதில் தொடங்கி, அவர்களுக்காக வன்முறையில் ஈடுபடுவது இனவெறியைப் பரப்புவது ஆதரவாளர்கள் சேர்ப்பது என்று பல வழிகளில் தொடர்கிறது. பிளாஷ்கே உதைபந்தாட்ட குண்டர் குழுவான ப்ளு கேப்சுக்கும் ஜேர்மனியின் வலதுசாரி தீவிரவாத் தேசிய ஜனநாயக கட்சிக்கும் இடையேயான தொடர்புகளின் தன்மைகளை எடுத்துக் காட்டுகிறார்.

2003ம் ஆண்டில் முன்னாள் கிழக்கு ஜெர்மன் உதைபந்தாட்டக் கழகமான லோகோமோடிவ் லீப்ஜிக் சரிந்த நிலையில் அதனை மறுமலர்ச்சி செய்வது என்ற போர்வையில் எவ்வாறு வலது தீவிரவாதிகள் அக்கழகத்தை கைப்பற்றி எவ்வாறு வலதுசாரி கால்பந்து கிளப்பை உருவாக்க முனைந்த கதையை தனது நூலில் பிளாஷ்கே குறிப்பிட்டார். இது ஜேர்மனிக்கு மட்டுமே உரியதல்ல. இதே வகைப்பட்ட நிகழ்வுகள் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, ஸ்பெயின் எனத் தொடங்கி இன்று முழு ஐரோப்பாவிலும் கோலோட்சுகிறது.

முதலாவது, வலதுசாரி தீவிரவாதம் மைதானத்தை விட்டு வெளியேறி வருகிறது. இரண்டாவது இதனை பற்றி தொடர்ச்சியாகக் கண்காணித்து அறிக்கையிடுவதில் பத்திரிகையாளர்கள் உண்மையில் ஆர்வம் காட்டவில்லை.

ஆய்வாளர்கள் முன்வைக்கும் முக்கியமான விமர்சனம் யாதெனில், கால்பந்து ஒரு விளையாட்டாக அதன் சாரத்தை இழப்பதால் வன்முறை தோன்றுகிறது. இன்று அது ஒரு வியாபாரமாக மாறியுள்ளது. வணிகமே இன்று அனைத்தையும் தீர்மானிக்கிறது. எனவே மக்கள் தொடர்ந்து வரவேண்டும், போட்டிகளைப் பார்க்க வேண்டும், பணத்தை செலவிட வேண்டும். இதுவே இன்றைய ஆட்டவிதிகளாக இருக்கிறது. எனவே சட்டத்தை மீறுபவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நிலை இல்லை மாறாக ஏதாவது தவறு நடந்தால் எல்லோரும் எதுவுமே நடக்காதது மறுபக்கம் முகத்தைத் திருப்ப வேண்டும். இதுவே இன்றைய நிலையாக உள்ளது. இன்று அரசாங்கங்களும் கழகங்களும் அதையே செய்கின்றன. அதையே எல்லோரிடமிருந்தும் எதிர்பார்க்கின்றன.

கால்பந்துக் குண்டர்களுக்கும் வலது தீவிரவாதத்திற்குமான உறவு ஐரோப்பாவுக்கு மட்டும் உரியதல்ல. ஐரோப்பாவில் அது குறிப்பாக குடியேற்றவாசிகளுக்கு எதிரானதாக இருக்கிறது. பிற பகுதிகளில் அதன் தன்மை வேறுபட்டதாக இருக்கிறது. குறிப்பாக குயிர் சமூகத்தினர், மூன்றாம் பாலினத்தவர் மீதான வன்முறைகள் என்று வெவ்வேறு வழிகளில் இது தொடர்கிறது.

கடந்த சில ஆண்டுகளில் இதற்கு எதிர்வினையாக இடதுசாரிப் பாசிச எதிர்ப்பை முன்னிறுத்தும் உதைபந்தாட்டக் குழுக்கள் தோற்றம் பெற்றுள்ளன. இது நம்பிக்கையைத் தருகிறது. இடதுசாரிகளே வலது தீவிரவாதத்தை எதிர்த்துப் போரிடுகிறார்கள்.

## கடிதங்கள்

### மக்கள் விழிப்பாக இருக்கவும்

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக, பல்வேறான குற்றச்செயல்களின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் மட்டுமன்றி, கைவரிசைகளை காட்டுவோரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளன.

இதனால், மக்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாத நிலைமையும், வீடுகளை பூட்டிவிட்டு செல்ல முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

பெறுமதியான பொருட்களை எடுத்துக்கொண்டும், தங்க ஆபரணங்களை அணிந்துகொண்டும், ஏன்? பணப்பையுடனும் செல்லமுடியாத துர்ப்பாக்கிய நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. எங்கு பார்த்தாலும் முடிச்சுமாறிகள், கள்வர்களின் எண்ணிக்கைகள் அதிகரித்துள்ளன.

இன்னும் சில இடங்களில், தாக்குதல்கள் நடத்தப்பட்டு, பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. ஆகையால், கொள்ளையிடும் பொருட்களை கொள்வனவு செய்வோர் தொடர்பில் அவதானத்தை செலுத்தி, அவர்களின் ஊடாக தகவல்களைப் பெற்று, அப்பாவி மக்களுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சிங்காரவேலன்

பஞ்சாப்


# இளைஞரைக் கடத்தி 4 பெண்கள் பலாத்காரம்

பஞ்சாப் மாநிலம், ஜலந்தர் நகரில் இளைஞர் ஒருவர் தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 27 ஆம் திகதி இரவு வேலையை முடித்துவிட்டு குறித்த இளைஞர் தனது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த போது அவரை நோக்கி ஒரு கார் வேகமாக வந்துள்ளது.

இதன்போது அக் காரில் 4 இளம் பெண்கள் இருந்துள்ளனர் . அத்துடன் அவர்கள் காரை நிறுத்தி குறித்த இளைஞரிடம் ஒரு துண்டுச் சீட்டை நீட்டி " இந்த முகவரி எங்கு உள்ளது?" என வினவியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த துண்டு சீட்டை வாங்கி அவர் பார்த்துக் கொண்டிருந்த போது, எதிர் பாராத விதமாக காருக்குள் இருந்த பெண்ணொருவர் இளைஞரின் முகத்தில், ஸ்பிரே ஒன்றை



அடித்துள்ளார். இதனை சற்றும் எதிர்பாராத இளைஞர் அடுத்த வினாடியே மயங்கி விழுந்துள்ளார். இதனையடுத்து அவ் இளைஞனை நான்கு பேரும் சேர்ந்து அக்காரில் கடத்திச் சென்றுள்ளனர்.

பின்னர் மறைவான ஒரு இடத்தில் காரை நிறுத்தி குறித்த இளைஞரின் கை, கால்களை கட்டிப்போட்டு, பாலியல் தொந்தரவுக்கு உட்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது 4 பேருமே போதையில் இருந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த இளைஞரையும் குடிக்கும்படி அப் பெண்கள் கட்டாயப்படுத்தி உள்ளனர் எனவும், பின்னர் ஒருவர் பின் ஒருவராகப் பலாத்காரம் செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் மறுநாள் அதிகாலை 3 மணியளவில் இளைஞனின் கை மற்றும் கண்களை கட்டி, ஏதோ ஒரு இடத்தில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதனையடுத்து பாதிக்கப்பட்ட இளைஞர் நேராகப் பொலிஸ் நிலையம் சென்று இது குறித்து கண்ணீர் மல்க புகார் அளித்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு

# ஆய்வுகூட இயந்திரம் அன்பளிப்பு




செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு 2 மில்லியன் பெறுமதியான ஆய்வுகூடத்திற்கு தேவையான இயந்திரம் ஒன்றினை முள்ளியவளை கொமர்ஷல் வங்கி கிளையினரால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட மருத்துவமனைக்கு மிகவும் முக்கிய தேவையான குறித்த இயந்திரம் கொமர்ஷல் வங்கி முள்ளிவயை கிளையின் சமூக பொறுப்பு நிதியத்திட்டத்தின் ஊடாக 20 இலட்சம் பெறுமதியான மையவிலக்கு சுழற்கி இயந்திரம் வழங்கும் நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நடைபெற்றது.

இதன்போது மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர்கள் மற்றும் கொமர்ஷல் வங்கி முள்ளியவளை கிளையின் முகாமையாளர் மற்றும் அதிகாரிகள் ஊழியர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது மருத்துவமனை நிர்வாகத்தினரால் கொமர்ஷல் வங்கிக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது மருத்துவமனையின் அபிவிருத்திகளோ இயந்திர கொள்வனவுக்கோ நிதிகள் அரசாங்கத்தினால் ஒதுக்கப்படுவதில்லை நன்கொடையாளர்களின் அன்பளிப்புக்களையும் நிதி உதவிகளையும் வைத்து தற்போது மக்களுக்கான சிறந்த சேவையினை வழங்கிவருவதாக மருத்துவமனை பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டது.

பஞ்சாப்



# ஜி20 தலைமை பொறுப்பை ஏற்கும் இந்தியா

ஜி20 குழுவின் தலைவர் பதவியை இந்தியா அதிகாரப்பூர்வமாக நேற்றைய தினம் (01) முதல் ஏற்றுள்ளது.


அந்தவகையில் உலகின் பொருளாதார ரீதியாக வளமான நாடுகளின் குழுவான ஜி20 மாநாட்டிற்கு இந்தியா ஒரு வருடம் முழுவதும் தலைமை தாங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் " இந்தியாவின் G20 நிகழ்ச்சி நிரலானது லட்சியம் சார்ந்ததாகவும், தீர்க்கமானதாகவும் இருக்கும். மனிதத்தை மையப்படுத்திய உலகமயமாக்கல் நோக்கி, புதிய முன்னுதாரணம் ஏற்படுத்திட நாம் அனைவரும் சேர்ந்து உழைப்போம்.

அதுமட்டுமல்லாது 'ஒரு பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்ற உணர்வை மக்களி மத்தியில் ஏற்படுத்தவும், உணவு, உரங்கள் மற்றும் மருத்துவப் பொருட்கள் ஆகியவற்றின் உலகளாவிய விநியோகத்தை அரசியலற்றதாக மாற்றவும் முயற்சி எடுக்கப்படும்.

ஒவ்வொரு இந்தியனும் ஜி-20 தலைவர் பதவியை ஏற்பது பெருமைக்குரிய தருணம். நமது நாட்டின் பல்வேறு நகரங்களிலும் மாநிலங்களிலும் ஜி20 கூட்டங்களை நடத்துவோம். இதன்மூலம், இந்தியாவின் அதிசயம், பன்முகத்தன்மை, உள்ளடக்கிய பாரம்பரியங்கள் மற்றும் கலாச்சார செழுமையை நம் விருந்தினர்கள் முழுமையாக அனுபவிப்பார்கள். நாம் இணைந்து ஜி20-ஐ உலகளாவிய மாற்றத்தின் கருவியாக மாற்றுவோம்" என்று கூறினார்.

மேற்கு வங்கம்



# கழுத்தில் குத்திய 30 செ.மீ திரிசூலம்

நபர் ஒருவர் கழுத்தில் குத்திய திரிசூலத்துடன் 65 கிலோமீற்றர் நடந்தே வைத்திய சாலைக்குச் சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு வங்கம், நாடியா பகுதியை சேர்ந்த பாஸ்கர் ராம். இவர் கடந்த 27 ஆம் திகதி கழுத்தில் குத்தப்பட்ட 30 சென்றி மீற்றர் நீளம் கொண்ட திரிசூலத்துடன் சுமார் 65 கிலோ மீற்றர் நடந்து கல்கதாவில் உள்ள வைத்தியசாலைக்கு வந்துள்ளார்.

இவரைக் கண்டு அதிர்ச்சியடைந்த மருத்துவர்கள் இது குறித்து விசாரித்த போது " வீட்டில் நடந்த சிறு தகராறு காரணமாக இந்த திரிசூலத்தை எடுத்து குத்திக்கொண்டதாகவும், ஆனால், தனக்கு வலி எதுவும் தெரியவில்லை" எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அந்த திரிசூலம் அவர்களது வீட்டில் கிட்ட தட்ட 150 வருடங்களாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து மருத்துவர்களால் குறித்த திரிசூலம் அகற்றப்பட்டுள்ளதாகவும் , அவர் தற்போது நலமுடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செலான் வங்கி உயர் இலாபத்தைப் பதிவு

செலான் வங்கி, 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த ஒன்பது மாதங்களில் வரிக்குப் பின்னரான இலாபமாக ரூ. 2,505 மில்லியனை பதிவு செய்துள்ளது.



இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து இதுவரை எதிர்கொண்டிராத மிக மோசமான நெருக்கடிச் சூழல் என வர்ணிக்கப்பட்ட தளம்பலான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியிலும் கூட செலான் வங்கி மேற்படி இலாபத்தை பெற்றுக் கொண்டுள்ளது. எனவே, இதனை மிகவும் பாராட்டத்தக்க ஒரு நிதிப் பெறுபேறாக நிதித்துறை ஆய்வாளர்கள் நோக்குகின்றனர்.

வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூ. 17,068 மில்லியனில் இருந்து, 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த 9 மாதங்களில் ரூ. 27,960 மில்லியனாக ஆண்டுக்கு-ஆண்டு அடிப்படையில் 63.82% இனால் அதிகரித்துள்ளது. தரகு கட்டணத்தை அடிப்படையாகக் கொண்ட வருமானமானது ரூ. 3,270 மில்லியனில் இருந்து ரூ. 4,520 மில்லியனாக இந்த 9 மாத காலப்பகுதியில் 38.22% இனால் அதிகரித்துள்ளது. வர்த்தக நிதி மற்றும் அட்டைகளுடன் தொடர்புபட்ட வருமானமே கட்டண வருமானம் அதிகரிப்பதற்கு பிரதான காரணிகளாக அமைந்துள்ளது.

வணிக நடவடிக்கைகளில் இருந்தான தேறிய வருவாய், நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமான மறுசீராக்கங்களில் இருந்தான தேறிய வருவாய், வெளிநாட்டு நாணயமாற்று பரிவர்த்தனையில் இருந்தான தேறிய வருவாய் மற்றும் ஏனைய தேறிய தொழிற்பாட்டு வருமானம் ஆகியவை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 37.13% அதிகரித்துள்ளது. அதாவது, கடந்த வருடத்தில் ரூ. 1,979 மில்லியனாக பதிவு செய்யப்பட்ட இவ் வருமானம், 2022 இன் 9 மாதங்களில் ரூ. 2,715 மில்லியனாக குறிப்பிடத்தக்களவுக்கு அதிகரித்துள்ளது தேறிய அந்நியச் செலாவணி மறுமதிப்பீட்டில் இருந்து கிடைக்கப் பெற்ற வருவாயே இதற்கு பிரதானமான பங்களிப்பை வழங்கியது.

கடந்த வருடத்தில் ரூ. 10,036 மில்லியனாக காணப்பட்ட மொத்த செலவினங்கள் 2022 இல் ரூ. 11,015 மில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய பரிசீலனைக்கு எடுத்தக் கொள்ளப்பட்ட 9 மாத காலப்பகுதியில் வங்கியின் மொத்தச் செலவினம் 9.75% அதிகரிப்பை பதிவு செய்திருக்கின்றது. ஆளணிசார் செலவுகள் ரூ. 530 மில்லியனால் அதிகரித்துள்ளது. கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைவாக ஊழியர்களுக்கான வெகுமதிகளை வழங்கியமை இவ்வதிகரிப்புக்கு பிரதான காரணியாகும்.

நாட்டில் நிலவிய உயர் பணவீக்கம் மற்றும் உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை போன்ற காரணங்களால் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக, வங்கியின் ஏனைய தொழிற்பாட்டு செலவினங்களும், தேய்மானம் மற்றும் பெறுமதி குறைப்பு செலவினங்களும் 10.39% இனால் அதிகரித்துள்ளது. எவ்வாறிருப்பினும், பல்வேறு கிரயக் கட்டுப்பாட்டு முன்னெடுப்புகளை மேற்கொள்வதன் மூலம் செலவுகளை கட்டுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை வங்கி தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.

கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் மொத்த மதிப்பிறக்க கட்டணமாக பதிவு செய்யப்பட்ட ரூ. 6.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2022ஆம் ஆண்டின் 9 மாத காலப் பகுதியில் இதனது பெறுமதி ரூ. 18.8 பில்லியன் என வங்கி கணிப்பீடு செய்துள்ளது. இது 199.09% அதிகரிப்பாகும்.

இந்நிலையில், உலகளவிலும் உள்நாட்டிலும் உருவாகி வருகின்ற பொருளாதார சவால்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடன் தொடர்புபட்ட கடன்சார் இடர்நேர்வு தன்மை ஆகியவற்றுக்கு முகம் கொடுக்கும் நோக்கில், செலான் வங்கியானது மதிப்பிறக்க ஒதுக்க ஏற்பாட்டை அதிகரித்துள்ளது.

மீளாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 9 மாத காலப்பகுதியில் தேறிய கடன்கள் மற்றும் முற்பணங்களாக ரூ. 453,730 மில்லியனை பெற்றுக் கொண்டதன் மூலம், 2.66% சிறியதொரு அதிகரிப்பை செலான் வங்கி பதிவு செய்திருக்கின்றது.

பெங்களூர்

# பாடசாலைப் பையில் ஆணுறை, சிகரெட்

## சிக்கிய 8,9, 10ஆம் தர மாணவர்கள்

பெங்களூரில் உள்ள பாடசாலையொன்றில் அண்மையில் மாணவர்களின் பைகளில் ஆணுறை, சிகரெட் உள்ளிட்ட பல பொருட்கள் கைப்பற்றப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மாணவர்கள் அனுமதியில்லாமல் பாடசாலைக்கு தொலைபேசி எடுத்துவருவதாக புகார்கள் எழுந்த நிலையில், குறித்த பாடசாலை நிர்வாகத்தினர் அண்மையில் திடீரென மாணவர்களின் பைகளை பரிசோதித்துள்ளனர்.

இதன்போது மாணவர்களின் பைகளில் இருந்து ஆணுறைகள், சிகரெட்கள், சிகரெட் லைட்டர்கள், காண்ட்ராசெப்டிவ் போன்றவற்றை அதிகாரிகள் கண்டெடுத்துள்ளனர்.

மேலும் சில மாணவர்கள் தண்ணீர் போத்தலில் மதுபானம் கலந்து கொண்டுவந்திருந்தமையும் இதன்போது



அம்பலமாகியுள்ளது.

அத்துடன் இப் பொருட்கள் அனைத்து 8,9, மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களின் பைகளிலிருந்தே அதிகாரிகள் கைபற்றியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் ஆசிரியர்கள் மட்டுமல்லாது மாணவர்களின் பெற்றோருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் குறித்த மாணவர்களுக்கு 10 நாட்கள் விடுப்பு அளிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யுமாறும் பெற்றோருக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

பெங்களூர்

# 5G கோபுரங்கள் அமைக்கத் தடை

இந்தியாவில் 5G சேவையைக் கடந்த ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

அந்தவகையில் குறிப்பிட்ட சில நகரங்களில் மாத்திரம் 5G சேவை அமுலுக்கு வந்துள்ள நிலையில், அடுத்த 2 ஆண்டுகளுக்குள் படிப்படியாக நாடு முழுவதும் 5G அமுலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் "விமான நிலையங்களுக்கு அருகே 5G சேவையை வழங்கக் கூடாது " எனத் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு மத்திய தொலைத்தொடர்புத்துறை உத்தரவிட்டுள்ளது.

விமான கருவிகள் பாதிக்கப்படும் என்பதற்காகவே விமான நிலையங்களுக்கு அருகே 5G சிக்னல் கோபுரங்கள் அமைக்கக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில், "விமான நிலையங்களின் ஓடுபாதையின் இருபுரங்களிலும் 2,100 மீற்றர் தூரத்திற்கும், ஓடுபாதையின் மத்திய பகுதியில் இருந்து 910 மீற்றர் தூரத்திற்கும் இடையே 3,300 முதல் 3,670 மெகா ஹெர்ட்ஸ் வரையிலான அலைவரிசையைக் கொண்ட 5G சிக்னல் கோபுரங்கள் அமைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

SLT–MOBITEL இனால்

# SIM மீளச் செயற்படுத்த வெகுமதிகள்

குரல் மற்றும் டேட்டா பாவனைக்கு சிறந்த பெறுமதியை வழங்கும் வகையில், கவர்ச்சிகரமான பெறுமதி வழங்கலை முன்னெடுப்பதாக SLT-MOBITEL அறிவித்துள்ளது. இலங்கையின் வேகமான மொபைல் வலையமைப்புடன் மீண்டும் இணைந்து கொள்ளும் வாடிக்கையாளர்களுக்காக இந்த சலுகைகளை வழங்க SLT-MOBITEL முன்வந்துள்ளது. SLT-MOBITEL உடன் தமது SIM அட்டையை மீளச் செயற்படுத்தி மீண்டும் இணையும் வாடிக்கையாளர்களுக்கு, விசேட குரல் மற்றும் டேட்டா பக்கேஜ் போன்றன வழங்கப்படும் என்பதுடன், எந்தவொரு வலையமைப்புக்கும் 3 மாத காலப்பகுதிக்கு UNLIMITED அழைப்புகள், மாதமொன்றுக்கு தலா 10GB anytime டேட்டா வீதம் 3 மாதங்களுக்கும் வழங்கப்படும்.

மேலும் வாடிக்கையாளர்களுக்கு, நாட்டில் பரந்தளவு வலையமைப்பை கொண்ட வேகமான வலையமைப்புடன் இணைந்து கொள்வதனூடாக பெருமளவு சௌகரியங்களையும் அனுபவிக்க முடியும். SLT-Mobitel மொபைலினால், பரந்தளவு குரல் மற்றும் டேட்டா பக்கேஜ்கள் வழங்கப்படுகின்றன. wrk & play, social media plans, special voice packages அல்லது TIKTOK & Instagram போன்றவற்றுக்கான விசேட திட்டங்கள் போன்ற அனைத்துக்கும் விசேட பக்கேஜ்கள் வழங்கப்படுவதுடன், தமது தேவைகளைப் பொறுத்து அவற்றை தெரிவு செய்து கொள்ளும் வசதி வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.

# உக்ரேன் - ரஷ்யப் போர்

## போர்க்குற்றங்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம்

உலகின் மிகப்பெரிய ,இராணுவ கூட்டமைப்பான நேட்டாவில் இணைவதற்கு உக்ரேன் தயாராகி வந்த நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டின் மீது ரஷ்யா போரை தொடங்கியது.

10 மாதங்களை கடந்தும் இப்போரானது முடிவில்லாமல் நீண்டு வருகின்றது.

இந்நிலையில் உக்ரேனில் ரஷ்யா செய்திருக்கக் கூடிய போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த சிறப்பு நீதிமன்றம் அமைக்க ஐரோப்பிய ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் புதன்கிழமை ஒரு சிறப்பு நீதிமன்றத்தை நிறுவுவதற்கு முன்மொழிந்தது.

இதன்போது உக்ரேனில் 60,000 மில்லியன் யூரோக்கள் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், போரினால் பாதிக்கப்பட்ட உக்ரேனை மீண்டும் கட்டியெழுப்ப ரஷ்ய சொத்துக்களை பயன்படுத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர்சுலா வான் டெர் லெயென் தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா

## 38 வருடங்கள் கழித்து அச்சுறுத்தும் எரிமலை



அமெரிக்காவின் மேற்கில் பசிபிக் பெருங்கடலுக்கு அருகில் இருக்கும் ஹவாய் தீவில் `மவுனா லோவா` என்னும் எரிமலை உள்ளது.

உலகிலேயே மிகப்பெரிய எரிமலையான இதில் சுமார் 38 வருடங்கள் கழித்து கடந்த 27 ஆம் திகதி வெடிப்பு உண்டாகியுள்ளது.

இதன் காரணமாக அதிகளவில் நெருப்பு குழம்புகள் வெளியேறி வருகின்றன.

இருப்பினும் எரிமலையின் விளிம்புகளுக்கு உள்ளேயே அவை முடிந்து விட்டன.

இதனால் அச்சம் தேவையில்லை என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் கூறுகிறது.

அதே நேரத்தில் எரிமலை வெடிப்பு அதிக ஆற்றல் கொண்டதாக இருக்கும் எனவும் நெருப்பு குழம்பின் ஓட்டமானது விரைவில் மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதால் அந்த பகுதியில் வசிக்கும் மக்கள் 2 லட்சம் பேர், எந்த நேரத்திலும் வெளியேற தயாராக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

சீனா

## 'ஜியாங் ஜெமின்' காலமானார்




சீனாவில் கடந்த 1993 ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் ஜியாங் ஜெமின்(Jiang Zemin).

1989-ம் ஆண்டு சீனாவை உலுக்கிய தியான்மென் போராட்டங்கள் ஒடுக்கப்பட்ட பின்னர் அதிகாரத்துக்கு வந்த ஜியாங் ஜெமின், உலக அரங்கில் சீனாவை வலிமையான நாடாக மாற்றும் முயற்சியில் பெரும்பங்காற்றினார்.

இந்நிலையில் ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஜியாங் ஜெமின், ஷாங்காய் நகரில் தனது மனைவி மற்றும் 2 மகன்களுடன் வசித்து வந்தார்.

இச்சூழலில் சமீபகாலமாக உடல் நலம் பாதிக்கப்பட்டு, அதற்காகச் சிகிச்சை பெற்று வந்த அவர் தனது 96 ஆவது வயதில் நேற்று முன்தினம் (30) காலமானார்.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி ஜியாங் ஜெமின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள சீன அரசு, நாடு முழுவதும் அரசு கட்டிடங்களில் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என அறிவித்துள்ளது.



அமெரிக்கா

## 7 ஆண்டுகளில் முதல்முறையாக

தென்கொரிய ரெயில்வே ஊழியர்கள் கடந்த 7 ஆண்டுகளில் முதன்முறையாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தலைநகர் சோலில் இயங்கும் சோல் மெட்ரோ (Seoul Metro) நிறுவனமானது அண்மையில் 2026ஆம் ஆண்டில் 1,500க்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலையிலிருந்து நீக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ரெயில் நிலையத்தின் தொழிற்சங்க ஊழியர்கள், குறித்த நிறுவனத்துடன் நடத்திய பேச்சுவார்த்தை பலனின்றி முடிந்ததால் நேற்றுமுன்தினத்திலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் சுமார் 13,000 ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனா

## தங்க நாக்குகளைக் கொண்ட மம்மிக்கள் கண்டுபிடிப்பு



அண்மையில் நைல் நதிக்கரையில் தங்க நாக்குகளைக் கொண்ட மம்மிகளை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

குவஸ்னா கல்லறை அகழ்வாராய்ச்சியை விரிவுபடுத்தியதில் இந்த படிமங்கள் கிடைத்துள்ளன.

இவை பல்வேறு காலக்கட்டங்களைச் சேர்ந்தவை என்று தொல்பொருள் அறிஞர்கள் கூறுகின்றனர்.

மேலும் இவ்வகை மம்மிக்கள் இதற்கு முன்னரும் கண்டுபிடிக்கப்ப ட்டிருந்தாலும், இத் தங்க நாக்குகள் குறித்த காரணம் என்னவென்று இதுவரை கண்டறியப்படவில்லை.

இது குறித்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில் " தங்க பொருட்கள் நாக்கில் பொருத்தப்படும் அணிகலனாக இருந்திருக்க முடியாது. ஏனெனில் இவை நாக்கின் வடிவிலேயே இருக்கின்றன. தங்க நாக்குடன் முன்னோர்கள் இருந்தனர் என்பதையும் அறிவுலகம் ஏற்காது. இந்த தங்க நாக்குக்கான பயன்பாடு புதிராகவே இருக்கிறது" என்றனர்.

கடந்த 2021ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தங்க நாக்கு கொண்ட மம்மி படிவம் கண்டிபிடிக்கப்பட்டது. அதே ஆண்டு இறுதியில் 2500 ஆண்டுகள் பழமையான ஆண் மற்றும் பெண்ணின் எலும்புக்கூடு தங்க நாக்குடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தான்

## மதரசாவில் குண்டுவெடிப்பு; 19 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானின் வடக்கு சமங்கன் மாகாணத்தின் தலைநகரான அய்பக்கில் மதரசாவொன்று உள்ளது.

இந்நிலையில் குறித்த மதரசாவில் நேற்று முன்தினம் (30) பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 16 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவத்துக்கு, எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. இந்நிலையில் இக் குண்டுவெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 24 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தாய்வான்

## பார்க்கோடை கையில் பச்சை குத்திய இளைஞர்



தாய்வானைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தனது முழங்கையில் பார்கோடை பச்சைக் குத்திய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பண பரிவர்த்தனைக்கு அடிக்கடி தொலைபேசியை எடுக்க சோம்பேறித்தனமாக இருந்ததால், அவர் இவ்வாறு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் " கையில் பச்சை குத்திக்கொள்ள வேண்டும் என்ற ஆசை எனக்கு நீண்ட நாட்களாக இருந்தது. அப்போது தான் எனக்கு 'பார்கோடையே பச்சையாகக் குத்தினால் என்ன?' என்ற யோசனை பிறந்தது.

இதனையடுத்து பார்கோடை பச்சை குத்திக்கொண்டேன். எனினும் பார்கோடை பச்சை குத்துவது என்பது மிகவும் கடினமான காரியமாக எனக்கு இருந்தது. ஏனெனில் இது பச்சைக் குத்துபவருக்கு ஒரு சவாலாக இருந்தது. எனவே யாரும் இதை முயற்சிக்கவேண்டாம் . எல்லோருக்கும் இந்த முயற்சி சரிவராது. அதுமட்டுமல்லாது இதனைப் பாதுக்காப்பது என்பது தனக்கு பெரும் சவலாக உள்ளது " என்றார்.

இதற்கு முன்னர் ரஷ்யாவை சேர்ந்த மருத்துவர் ஒருவர் தனது சருமத்திற்குள், கார்டின் சிப்பை பொறுத்தி,பண பரிவர்த்தனை செய்துவந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



உலகக் கிண்ணம்:

# இறுதி 16 அணிகளுக்கான சுற்றில் ஆர்ஜென்டீனா, போலந்து

கட்டாரில் நடைபெற்று வரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரின் இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்கு ஆர்ஜென்டீனா, போலந்து, அவுஸ்திரேலியா ஆகியன தகுதி பெற்றுள்ளன.

நேற்று அதிகாலை நடைபெற்ற போலந்துடனான குழு சி போட்டியை 2-0 என்ற கோல் கணக்கில் வென்றே இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்கு ஆர்ஜென்டீனா தகுதி பெற்றிருந்தது.

இந்நிலையில், மற்றைய குழு சி போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் சவுதி அரேபியாவை மெக்ஸிக்கோ வென்றிருந்த நிலையில், கோலெண்ணிக்கை அடிப்படையில் இக்குழுவிலிருந்து இரண்டாவது அணியாக இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்கு போலந்து தகுதி பெற்றது.

இதேவேளை, நேற்று முன்தினமிரவு நடைபெற்ற டென்மார்க்குடனான குழு டி போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்ற அவுஸ்திரேலியாவும் இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்குத் தகுதி பெற்றது.

இந்நிலையில், மற்றைய குழு டி போட்டியில் நடப்புச் சம்பியன்களான பிரான்ஸ், துனீஷியாவிடம் 0-1 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது.

இதேவேளை, இன்றிரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ள ஒரு குழு எச் போட்டியில் தென்கொரியாவை போர்த்துக்கல் எதிர்கொள்ளவுள்ளதுடன், அடுத்த குழு எச் போட்டியில் கானாவும், உருகுவேயும் மோதுகின்றன.

இந்நிலையில், நாளை அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள ஒரு குழு ஜி போட்டியில் சேர்பியாவை சுவிற்ஸர்லாந்து எதிர்கொள்ளவுள்ளதுடன், மற்றைய குழு ஜி போட்டியில் கமரூனை பிரேஸில் எதிர்கொள்ளவுள்ளது.

குறுமன்வெளி–றொபின் விளையாட்டுக் கழகத் தொடர்:

## சம்பியனான களுவாஞ்சிக்குடி மக்ஸ் வி.க

அஸ்ஹர் இப்றாஹீம்



குறுமன்வெளி றொபின் விளையாட்டுக் கழகம் நடாத்திய கிரிக்கெட் சம்பியன்ஷிப் தொடரில் களுவாஞ்சிக்குடி மக்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

ஒன்பது பேர் கொண்ட 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில் இன்டிபென்டென்ட் விளையாட்டுக் கழகத்தை வென்றே மக்ஸ் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இன்டிபென்டென்ட் 4.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து எட்டு ஓட்டங்களையே பெற்றது. பதிலுக்கு, ஒன்பது ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மக்ஸ் 3.1 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரமே இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்து சம்பியன் கிண்ணத்தையும், 15,000 ரூபாய் பணப்பரிசையும் பெற்றுக்கொண்டது.

மக்ஸ் இவ்வாண்டு சம்பியனான 13ஆவது தடவை இதுவாகும்.

மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## ஆப்கானிஸ்தானை வென்ற இலங்கை



ஆப்கானிஸ்தானுக்கெதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இலங்கை வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பல்லேகலவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் இலங்கை வென்றதன் காரணமாக முதலாவது போட்டியில் ஆப்கானிஸ்தானும், இரண்டாவது போட்டியில் முடிவேதும் பெறப்படாமை காரணமாக தொடர் 1-1 என சமநிலையில் முடிவடைந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான்: 313/8 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: இப்ராஹிம் ஸட்ரான் 162 (138), நஜிபுல்லாஹ் ஸட்ரான் 77 (76) ஓட்டங்கள். பந்துவீச்சு: கசுன் ராஜித 3/60, வனிடு ஹஸரங்க 2/67, தனஞ்சய டி சில்வா 1/42, அசித பெர்ணாண்டோ 1/64)

இலங்கை: 314/6 (49.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: சரித் அஸலங்க ஆ.இ 83 (72), குசல் மென்டிஸ் 67 (61), தசுன் ஷானக 43 (44), பதும் நிஸங்க 35 (55), தினேஷ் சந்திமால் 33 (32), டுனித் வெல்லலாகே ஆ.இ 31 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரஷீட் 4/37, மொஹமட் நபி 2/56)

போட்டியின் நாயகன்: சரித் அஸலங்க

தொடரின் நாயகன்: இப்ராஹிம் ஸட்ரான்

அவுஸ்திரேலியாவுக்கெதிரான

## முதலாவது டெஸ்டில் போராடும் மேற்கிந்தியத் தீவுகள்



அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் போராடி வருகிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், பேர்த்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான குறித்த டெஸ்டின் நேற்றைய இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த அவுஸ்திரேலியா, மர்னுஷ் லபுஷைன் 204 ஓட்டங்களைப் பெற்றபோது கிறேய்க் பிறத்வெய்ட்டிடம் அவரைப் பறிகொடுத்தது.

தொடர்ந்து ஸ்டீவ் ஸ்மித்தும், ட்ரெவிஸ் ஹெட்டும் ஓட்டங்களைக் குவித்த நிலையில் ஹெட் 99 ஓட்டங்களுடன் பிறத்வெய்ட்டிடம் வீழ்ந்ததோடு அவுஸ்திரேலியா 4 விக்கெட்டுகளை இழந்து 598 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. ஸ்மித் ஆட்டமிழக்காமல் 200 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 02 டிசெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.